janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2024 மார்ச் 17 - மார்ச் 23 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 50






## நாகை, திருப்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போட்டி

# நாற்பதும் நமதே, நாடும் நமதே

### மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் திட்டவட்டம்

**திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் நாகை, திருப்பூர் ஆகிய இரண்டு தொகுதிகளில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடுகிறது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மு.வீரபாண்டியன், கே.சுப்பராயன், வை.சிவபுண்ணியம் கோ.பழனிசாமி, டி.ராமசாமி ஆகியோர் மார்ச் 12 ஆம் தேதி காலை சந்தித்தனர். அப்போது தொகுதி ஒதுக்கீடு ஒப்பந்தம் கையெழுத்தானது.

அந்த ஒப்பந்தத்தில், "நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகமும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் மற்ற தோழமைக் கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக 29.2.2024 அன்று செய்து கொண்ட தொகுதி ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நாகப்பட்டினம், திருப்பூர் ஆகிய தொகுதி களில் போட்டியிடுவதென 12.3.2024 அன்று தீர்மானிக்கப்பட்டது" என குறிப்பிடப்பட்டிருந்தது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இரா.முத்தரசன், "திமுக கூட்டணியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நாகப்பட்டினம், திருப்பூர் ஆகிய இரண்டு தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு தொகுதிகளில் மட்டுமல்ல, நாற்பது தொகுதிகளிலும் கூட்டணி அமோக வெற்றி பெறும். நாற்பதும் நமதே, நாடும் நமதே.

நாட்டு மக்களைத் திசைதிருப்பும் வேலையில் பாஜக ஈடுபட்டுள்ளது. பிரதமர் மோடி கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. ஆண்டுக்கு இரண்டு கோடிப் பேருக்கு வேலை கொடுக்கப்படும் என வாக்குறுதி

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## குடியுரிமைச் சட்ட விதிகள்: பாஜகவின் நாசகரத் திட்டம்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு எடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு:

குடியுரிமை சட்ட திருத்தம் நாடாளுமன்றத்தில் 2019 ல் நிறைவேற்றப்பட்டது. அண்டை நாடுகளில் மத அடிப்படையில் துன்புறுத்தப்படும் சிறுபான்மையினர் இந்தியாவில் குடியுரிமை பெறுவதற்கு இது உதவும் என்று இதற்குக் காரணம் கூறப்பட்டது. வரும் தேர்தலை மனதில் கொண்டு ஒரு திட்டமிட்ட நகர்வாக, 2024 மார்ச் 12 ஆம் தேதி அன்று, இந்தச் சட்டத்துக்கான (CAA) விதிகளை ஒன்றிய அரசின் உள்துறை அறிவித்துள்ளது.

தேர்தல் பத்திரங்களின் விவரங்களை வெளியிடுமாறு எஸ்.பி.ஐ.க்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட நாளில் இது செய்யப்பட்டுள்ளது.

வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் ஆதாயம் தேடும் நோக்கில், மக்களை மதத்தின் அடிப்படையில் பிளவுபடுத்தி எதிர்த் துருவங்களில் நிறுத்துவதற்காகவே, இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது

நமது அரசியலமைப்புச் சட்டம் மதத்தின் அடிப்படையில் மக்களை அடையாளப்படுத்தவில்லை. குடியுரிமை மற்றும் குடிமக்களின் தகுதியை முடிவு செய்வதற்கு மதம் ஒருபோதும் அளவுகோல் அல்ல.

ஆளுங்கட்சியின் பிரித்தாளும் கொள்கைக்கு ஏற்ற வகையில் மட்டுமே எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாகக் கண்டிக்கிறது.

நாட்டின் சொத்துக்களை உறிஞ்சி வாழ்கிற தனக்கு நேசமான, ஒட்டுண்ணி முதலாளிகளைப் பாதுகாக்கும் அதே நேரத்தில், மக்களை இரு கூறாக பிளக்கும் பிஜேபியின் நாசகரமான சதி திட்டத்தின் இன்னொரு பகுதியே இது.

## மதுரை, திண்டுக்கல் மார்க்சிஸ்ட் கட்சி போட்டி

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியுடன் நடந்த பேச்சுவார்த்தையில் மதுரை, திண்டுக்கல் ஆகிய இரண்டு தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கான ஒப்பந்தத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் ஆகியோர் கையெழுத்திட்டனர். பி.சம்பத், பெ.சண்முகம், என்.குணசேகரன் ஆகியோரும், திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன், தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தைக் குழுவைச் சேர்ந்த டி.ஆர்.பாலு, க.பொன்முடி, எ.வ.வேலு, அர.சக்கரபாணி ஆகியோரும் உடனிருந்தனர்.

கட்சிக் கடிதம்

# கபடதாரிகளை முறியடிப்பீர்!



போர்க்குணமிக்க தோழர்களே!

**நாடாளுமன்ற 18வது பொதுத் தேர்தலுக்கான நாள்களை தேர்தல் ஆணையம் அறிவித்து, தேர்தலை சந்திக்க உள்ளோம். நடைபெற உள்ள பொதுத் தேர்தல் மாபெரும் யுத்த களமாகும்.**

போர்க்களத்தில் வெல்லப்போவது யார்? யார் வீழ்த்தப்பட வேண்டும் என்பது மிக மிக முக்கியமானதாகும்.

நயவஞ்சகம் நிறைந்த படுபிற்போக்குத்தன, வகுப்புவாத வெறி பிடித்த ஆர்எஸ்எஸ் கும்பலின் அரசியல் பிரிவான பாஜக, கடந்த பத்தாண்டு காலமாக, நாட்டை நாசமாக்கிய நரேந்திர மோடியின் தலைமையில் ஆட்சி நடத்தி வருகின்றது.

10 ஆண்டுகளில் தங்களின் ஆட்சியில் செய்த சாதனைகளை எடுத்துக் கூறி மக்களிடத்தில் வாக்கு கேட்க முன்வர வேண்டும். ஆனால் அரசியல் நேர்மையற்ற பாஜக, சாதனைகள் என எடுத்துக் கூற எதுவும் இல்லை என்பதால் நாட்டையும், மக்களையும் பிளவுபடுத்துகின்ற நயவஞ்சக வலையை வீசத் துணிந்து விட்டது.

கடந்த 2014ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆர்எஸ்எஸ் கும்பலால் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட மோடி, நாட்டு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை மக்கள் மறந்து விட வேண்டும் என்பதற்காக, திசைதிருப்பும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வழங்கப்படும் என்று கூறியது என்னவாயிற்று?

வாக்குறுதிகளின்படி கடந்த 10 ஆண்டுகளில் 20 கோடி இளைஞர்களுக்கு வேலை கொடுத்து இருக்க வேண்டும் அல்லவா? வேலை கொடுத்தார்களா?

வேலை கொடுக்காதது மட்டுமல்ல, வேலையில் இருந்தவர்களை, லட்சக்கணக்கான இளைஞர்களை வீட்டுக்கு அனுப்பினார்கள் அல்லவா?

உங்கள் ஊர் சுவர்கள் தோறும் மோடியே, மோடியே! எங்கே வேலை? வேலை கொடுக்காத மோடியே, ஓட்டு ஒரு கேடா? என எழுதுங்கள்.

வெளிநாட்டில் உள்ள கறுப்புப்பணம் அனைத்தும் மீட்கப்படும்! அவை இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரின் வங்கிக் கணக்கில் ரூ.15 லட்சம் வரவு வைக்கப்படும் என்று சொன்னாயே, கறுப்புப் பணத்தை மீட்டாயா? வங்கிக் கணக்கில் வரவு வைத்தாயா? மோடியே பதில் சொல் என்று சுவர்கள் தோறும் எழுதுங்கள்.

விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினாயா? விலை நிர்ணயச் சட்டம் நிறைவேற்றப்படும் என வாக்குறுதி கொடுத்தாயே நிறைவேற்றினாயா? என சுவர்கள் தோறும் எழுதுங்கள்.

விவசாயிகளின் போராட்டத்தை தமது கோரக்கரங்களால் கொடுமையாகத் தாக்கும் கொலை வெறி கொண்ட மோடியே, உனக்கு ஓட்டு ஒரு கேடா? என சுவர்கள் தோறும் எழுதுங்கள்.

விலைவாசியை குறைப்பேன் என்றாயே, விலையை குறைத்தாயா?

கல்வி கற்க மாணவர்கள் பெற்ற கடனை ரத்து செய்ய மறுக்கும் மோடியே! கோடீஸ்வரர்கள் பொதுத்துறை வங்கிகளில் பெற்ற பல்லாயிரம் கோடி ரூபாய்களை வாரா கடன் என்று கூறி தள்ளுபடி செய்தாயே, யாருக்கு கடன் தள்ளுபடி செய்தாயோ அவர்களிடமே சென்று வாக்கு கேள்!

2014ல் சமையல் எரிவாயு விலை ரூ. 400 ஆக இருந்தது. கடந்த 10 ஆண்டு ஆட்சியில் படிப்படியாக குறைப்பதற்கு மாறாக விலையை உயர்த்தி ரூ. 1200 வரை அதிகரித்து விட்டு, தற்போது ஓட்டு வாங்க வேண்டும் என்பதற்காக ரூ. 100 மட்டும் குறைத்துள்ள வேடதாரியே, மக்கள் என்ன ஏமாளிகளா?

தொழிலாளர்களுக்கு துரோகம் இழைத்து, கார்ப்பரேட் முதலாளிகளுக்கு சலுகை வழங்கி, தொழிலாளர்களின் உரிமைகளை இழக்கச் செய்த துரோகத்தை தோலுரிக்க வேண்டாமா?




சிறு குறு நடுத்தர தொழில்கள் அனைத்தும் நாசமாக்கப்பட்டு, இனி தொழில்கள் நடத்த முடியாது என்கிற அவலத்தை உருவாக்கி, அனைவரையும் நடுத்தெருவில் நிற்க வைத்த நரேந்திர மோடியே, உனக்கு ஓட்டு ஒரு கேடா?

தொழிலாளர்களுக்கு, விவசாயிகளுக்கு, தொழில் முனைவோர்களுக்கு, மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு, பெண்களுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு எதிராகச் செயல்படும் நரேந்திர மோடி அரசு!

ஏழை எளிய நடுத்தர மக்கள் அனைவரிடத்திலும் வரி மேல் வரிப் போட்ட ஈவு இரக்கமற்ற மோடி அரசு, பெரும் நிறுவனங்கள் செலுத்திட வேண்டிய வரியைக் குறைத்து அவர்களின் ஆதரவைப் பெற்ற மோடி அரசு, மக்களிடம் வாக்கு கேட்க என்ன உரிமை இருக்கின்றது?



கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சலுகைகளை சட்டரீதியாக வழங்கிவிட்டு, அதன் பிரதிபலனாக தேர்தல் பத்திரம் மூலம் கோடி கோடியாக கொள்ளையடித்த கும்பலுக்கு மக்களிடம் வாக்கு கேட்க என்ன தகுதி இருக்கின்றது?

மாநில உரிமைகளைப் பறித்து தான்தான் அதிகாரமிக்கவன் என ஜனநாயக விரோதியாக செயல்படும் மோடிக்கு மக்களிடம் வாக்கு கேட்க என்ன தகுதி இருக்கின்றது?

மணிப்பூர் மக்களைப் பிளவுபடுத்தி கலகத்தை உருவாக்கி துணை ராணுவப் படை கொண்டு காக்கை குருவிகளைப் போன்று மக்களை சுட்டுத் தள்ளி மணிப்பூர் மாநிலமே, மாதக்கணக்கில் தீப்பற்றி எரிய வைத்த மோடிக்கு வாக்கு கேட்க என்ன உரிமை இருக்கின்றது?

மாற்றுக் கருத்து இங்கே இடமில்லை என கொக்கரிக்கும் சர்வாதிகார கும்பலுக்கு வாக்கு கேட்க என்ன தகுதி இருக்கின்றது?

ஜனநாயகத்தை ஆழக் குழி தோண்டி புதைத்து விட்டு, சர்வாதிகார ஆட்சி நடத்தும் மோடிக்கு ஜனநாயகம் பற்றி பேசுவதற்கு என்ன தகுதி இருக்கின்றது?

கபடதாரிகள், தாங்கள் செய்த குற்றங்கள் அனைத்தையும் மூடி வைத்துவிட்டு மக்களை திசைதிருப்ப மதம், கடவுள் என்கிற வஞ்சக வலைகளை வீசுவதைத் தடுத்து நிறுத்தி மக்களைக் காக்க ஆயத்தமாகுங்கள்.

கடவுள் மீதும், மதத்தின் மீதும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை அரசியல் ஆதாயத்திற்காக வஞ்சக வலை வீசும் வஞ்சகர்களை தோலுரிக்க வேண்டாமா?

இயற்கை சீற்றத்தால் தமிழக மக்கள் குறிப்பாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, குமரி மற்றும் விருதுநகர் மாவட்ட மக்கள் பரிதவித்து நின்றார்கள்.

வீடுகளையும் பண்ட பாத்திரங்களையும் உணவுப் பொருட்களையும் துணிமணிகளையும் இழந்து நிர்க்கதியாய் நின்ற மக்களுக்கு ஆறுதல் கூறக் கூட வராத பிரதமர் நரேந்திர மோடி தமிழ்நாட்டு மக்களிடம் வாக்கு கேட்பதற்கான தார்மீக உரிமை ஏது?

பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜநாத்சிங் வந்தார். ஹெலிகாப்டரில் பறந்து பார்வையிட்டார். ஆனால் பலன் என்ன?

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வந்தார். பார்வையிட்டார். பலன் என்ன?

பிரதமர் அனுப்பிய உயர்மட்டக் குழு வந்தது, கார்களில் பவனி வந்தனர். பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர். பலன் என்ன?

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பிரதமர் ஒதுக்கிய இரவு பத்தரை மணிக்கு சென்று சந்தித்து நிவாரணம் கோரி மனு கொடுத்தார். பதில் என்ன?

திமுக நாடாளுமன்றக்குழுத் தலைவர் திரு டி.ஆர்.பாலு தலைமையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் கே.சுப்பராயன் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்துறை அமைச்சரை நேரில் சந்தித்து இயற்கை சீற்றப் பாதிப்புக்கு ரூ. 37 ஆயிரம் கோடி நிதி கேட்டு மனு கொடுத்தார்கள். பதில் என்ன?

இதுவரை ஒற்றை ரூபாய் கூட வழங்க மறுத்து மோடிக்கும் அவர்களது கும்பலுக்கும் தமிழ்நாட்டில் வாக்கு கேட்க என்ன உரிமை இருக்கின்றது?

அனைத்தையும் மக்கள் மறந்து விட வேண்டும் என்பதற்காக, திசை திருப்ப வேண்டும் என்கிற நயவஞ்சகமாக குடியுரிமை திருத்தச் சட்டம் உடனடியாக அமலுக்கு வரும் என்ற உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

இந்து, இஸ்லாம், கிறிஸ்தவர், சீக்கியர், பௌத்தர் என்ற வேறுபாடு இன்றி வாழும் மக்களை மத ரீதியாகப் பிளவு படுத்தி, வாக்குகளைப் பெற வஞ்சகம் செய்யும் வேடதாரிகளைப் புரிந்து கொள்ளுங்கள்.

நாட்டின் ஜனநாயகம் காக்கப்பட, மதச்சார்பின்மை காக்கப்பட, அரசியல் அமைப்புச் சட்டம் காக்கப்பட, அரசியல் அமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட அமைப்புகள் காக்கப்பட அக்கறை உள்ளோர் அனைவரும் ஓரணியில் பங்கேற்க வாரீர்!

அத்தகைய உயர்நோக்கத்துடன் கொள்கைப் பூர்வமாக உருவாக்கப்பட்டு, கடந்த பல ஆண்டுகளாக திமுக தலைமையிலான அணியில் அங்கம் வகித்து செயல்பட்டு வருகின்றோம்.

திமுக தலைமையிலான கூட்டணிக் கட்சிகளிடத்தில் எந்தவித முரண்பாடும் இன்றி மிக ஒற்றுமை உணர்வோடு

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்



நா.பெரியசாமி

**பாஜக ஒன்றிய அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை சீர்குலைத்தும், சிதைத்தும் வருவதை தொடர்ந்து எடுத்துக் கூறி வருகிறோம்.**



# நூறு நாள் வேலை உரிமைக்கு பேராபத்து ?

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நெருங்கும் நேரத்தில், வேலை உறுதியளிப்பு திட்டத்தில் வழங்கப்படும் வேலை நாட்களை வெட்டிக் குறைக்க வேண்டும் என்று வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு நிபந்தனை போட்டு மிரட்டி நிர்பந்தித்து வருவது அதிர்ச்சி அளிக்கிறது.

பாஜக ஒன்றிய அரசின் அதிகாரத்தில் அமர்த்தப்பட்ட ஆரம்ப காலத்தில் (2014) இருந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டை ஆண்டுக்கு ஆண்டு குறைத்து வந்திருப்பதை நிதித்துறை ஆவணங்களில் காண முடியும். 2020 – 21 ஆம் ஆண்டில் கொரோனா நோய்த்தொற்று பரவல் தடுப்பு காலத்தில், நாடு முடக்கப்பட்டதால், அந்த ஆண்டில் மட்டும் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வரும் நிதியாண்டில் (2024–25) இத்திட்டத்திற்கு ரூ. 86 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியப் பாக்கியும், திட்டப் பணிகளில் மாநிலங்கள் செலவு செய்துள்ள வகையில் கொடுக்க வேண்டிய நிதிப் பாக்கியும் சேர்ந்து ரூ 32 ஆயிரம் கோடி நிலுவையில் நிற்கிறது. இதனை உடனடியாக நேர் செய்ய வேண்டும். இதனை கழித்து பார்த்தால் மீதி இருப்பது ரூ. 54 ஆயிரம் கோடி தான், இது 2023 – 24 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை விட பத்து சதவீதம் குறைவு என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

நாடு முழுவதும் ஊரகப் பகுதிகளில் வாழ்ந்து வரும் உடல் உழைப்பு மட்டுமே வாழ்வாதாரம் என்ற வாழ்க்கை நிலையில் உள்ள உடல் உழைப்புத் தொழிலாளர் குடும்பங்கள் ஆண்டுக்கு தலா 100 நாட்கள் வேலை பெறுவதற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் (2005) சட்டபூர்வ உரிமை அளிக்கிறது.

உடல் உழைப்புத் தொழிலாளர் குடும்பங்களின் சட்டபூர்வ வேலை பெறும் உரிமையை பாதுகாத்து, அதனை செயல்படுத்த ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை வழியாக கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை அமலாக்குவது கிராம ஊராட்சிகளின் கடமை பொறுப்பாகும்.

வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கான பணிகளை தேர்வு செய்வது, அந்தத் திட்டப் பணிகள் நிறைவேற்றுவது, , திட்டப் பணிகள் ஊழல், முறைகேடுகளுக்கு இடம் கொடுக்காமல், வெளிப்படையாக நடைபெறுவதை மேலாண்மை செய்வது என எல்லா அதிகாரமும் கிராம சபா கூட்டங்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. ஆனால், அதிகார வர்க்கம் இங்கு மக்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் சுதந்திரமாக செயல்பட அனுமதிப்பதில்லை என்பதை அனுபவம் உணர்த்துகிறது.

இதன் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் நடப்பு மார்ச் 12 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரையிலான இரு வார காலங்களுக்கு வட்டார வாரியாக வேலை நாட்களுக்கு இலக்கு நிர்ணயித்து, நிபந்தனை விதித்துள்ளது. இது வேலை உறுதியளிப்புச் சட்டத்திற்கு நேர் விரோதமான அத்துமீறல் நடவடிக்கையாகும்.

ஒரு உதாரணத்திற்கு விருதுநகர் மாவட்டத்தை எடுத்துக் கொள்வோம்.

இங்கு 11 வட்டார வளர்ச்சி பகுதிகளில் (ஒன்றியங்கள்) 450 கிராம ஊராட்சிகள் இருக்கின்றன. இந்த மாவட்டத்தில் இரண்டு லட்சத்து 40 ஆயிரம் வேலை அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இரண்டு லட்சத்து 92ஆயிரம் தொழிலாளர்கள் வேலை பெறும் சட்டபூர்வ உரிமை பெற்றுள்ளனர். இந்த பெரும் எண்ணிக்கையில் இரண்டு லட்சத்து 54 ஆயிரம் தொழிலாளர்கள் பணிக்கு வந்து செல்லும் செயல்படும் தொழிலாளர்கள் (Active Workers) என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு வட்டார (ஒன்றியம்) வாரியாக மார்ச் 12 முதல் 27 வரை தினசரி எவ்வளவு மனித நாள் வேலை வழங்க வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை விட ஒரு நாள் கூடுதலாக வேலை வழங்கினாலும். அதற்கான செலவுகளை வட்டார வளர்ச்சி அலுவலர் முதல் அதில் தொடர்புடைய அலுவலர்கள் அனைவரது ஊதியத்திலும் பிடித்தம் செய்து எடுக்கப்படும் என மிரட்டி எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

எந்த அதிகாரி தொழிலாளர்களுக்கு வேலை வழங்க ஆர்வம் காட்டுவார்? இயன்ற வரை வேலை வழங்காமல், ஒதுக்கப்பட்ட நிதியை மிச்சப்படுத்தி, "சிக்கனத்தின் சிகரம்" என்று மேலதிகாரிகளிடம் பாராட்டுதல் பெறுவதற்கு தானே முனைப்பு காட்டுவார்? இங்கே மறுக்கப்படுவது தொழிலாளர்களின் சட்டபூர்வ வேலை பெறும் உரிமை என்பதை தொழிலாளர்கள் உணர வேண்டும்.

தொழிலாளர்கள் போராடி பெற்ற உரிமைகளை பறிக்கும் பாஜகவின் ஜனநாயக விரோத, சட்ட விரோத செயல்களுக்கு எதிராக மாநில அரசு கடுமையான எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும்.

தொழிலாளர்களுக்கு பயன்தராத முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தை நிர்வகித்து வரும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர், நிதித்துறை அமைச்சர் என இரண்டு மிக, மிக முக்கிய பிரமுகர்கள் உள்ள விருதுநகர் மாவட்டத்திற்கே இந்த கதி என்றால் மற்ற மாவட்டங்களின் கதி அதோ கதிதான்!

பிரிட்டிஷ் காவல்துறை மண்டையை பிளந்த போதும், விடுதலைக் கொடியை உயர்த்திப் பிடித்து, "வெள்ளையனே, வெளியேறு" என்று முழங்கிய தியாகி குமரன் வாழ்ந்த திருப்பூர் மாவட்டத்தில் 25 நாட்களுக்கு வேலை வழங்கக் கூடாது என வாய்மொழி உத்தரவு நடைமுறையில் இருக்கிறது.

இனியும் பொறுமை காத்து பயனில்லை என்பதை கிராமப்புறப் பாட்டாளிகள் உணர வேண்டும். ஒன்றிய அதிகாரத்தில் பாஜகவும், அதன் பரிவாரங்களும் வினாடியும் நீடிக்க தகுதியில்லை என்பதை ஒவ்வொரு மனிதனும் உணரும் வகையில் நமது பரப்புரை இயக்கம் அமைய வேண்டியது காலத்தின் தேவையாகும்.

வருகிறது நாடாளுமன்றத் தேர்தல். நமது வாக்குரிமை சட்டபூர்வ வேலை பெறும் உரிமையை பாதுகாக்கும், மேலும் பலப்படுத்தும் புதிய அரசுக்கு அதிகாரம் அளிக்கும் ஆயுதமாகட்டும்.

மதவாத, விவசாயத் தொழிலாளர் விரோத, ஜனநாயக விரோத பாஜகவை தோற்கடிப்போம்.

தொடர்புக்கு: 9443118544

## வருவாய் அமைச்சர், நிதியமைச்சரைக் கொண்ட விருதுநகர் மாவட்டத்திற்கு இந்த கதியா?

வட்டார (ஒன்றியம்) வாரியாக விபரத்தை பாருங்கள் அருப்புக்கோட்டை ஒன்றியம் இங்கு 32 ஊராட்சிகளில் 21 ஆயிரத்து 343 தொழிலாளர்கள் வேலை அட்டை பெற்றுள்ளனர். இவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தினசரி மனித நாள் வேலை 118 இதே அடிப்படையில் 36 ஊராட்சிகளில் 20 ஆயிரத்து 804 தொழிலாளர்கள் வேலை அட்டை பெற்றுள்ள காரியாபட்டி ஒன்றியத்தில் 149 தினசரி மனித நாள் வேலை மட்டுமே செய்ய வேண்டும்.

- 44 ஊராட்சிகளில் 18 ஆயிரத்து 493 தொழிலாளர்கள் வேலை அட்டையுடன் இருக்கும் நரிக்குடி ஒன்றியத்தில் 213 நாட்கள்,
- 36 ஊராட்சிகளில் 21 ஆயிரத்து 906 தொழிலாளர் உள்ள ராஜபாளையம் ஒன்றியத்துக்கு 189 நாட்கள்,
- 46 ஊராட்சிகளில் 21 ஆயிரத்து 135 தொழிலாளர் உள்ள சாத்தூர் ஒன்றியத்துக்கு 230 நாட்கள்,
- 54 ஊராட்சிகளில் 27 ஆயிரத்து 847 தொழிலாளர்கள் இருக்கும் சிவகாசி ஒன்றியத்துக்கு 120 நாட்கள்,
- 29 ஊராட்சிகளில் 20 ஆயிரத்து 656 தொழிலாளர்கள் உள்ள ஸ்ரீவில்லிப்புத்தூர் ஒன்றியத்தில் 196 நாட்கள்,
- 40 ஊராட்சிகளில் 21 ஆயிரத்து 376 தொழிலாளர்கள் இருக்கும் திருச்சுழி ஒன்றியத்திற்கு 206 நாட்கள்,
- 48 ஊராட்சிகளில் 22 ஆயிரத்து 553 தொழிலாளர்கள் உள்ள வெம்பக்கோட்டை ஒன்றியத்துக்கு 133 நாட்கள்,
- 58 ஊராட்சிகளில் 24 ஆயிரத்து 699 தொழிலாளர்கள் உள்ள விருதுநகர் ஒன்றியத்துக்கு 211 நாட்கள்,
- 27 ஊராட்சிகளில் 19 ஆயிரத்து 513 தொழிலாளர்கள் இருக்கும் வத்திராயிருப்பு ஒன்றியத்துக்கு 147 நாட்கள்

என இலக்கு நிர்ணயித்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது

## வினாடி - வினா

1. இந்தியாவின் முதல் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் எப்பொழுது நடைபெற்றது?
2. முதல்நாடாளுமன்றத் தேர்தலில் எத்தனை கட்சிகள் போட்டி யிட்டன?
3. இந்தியாவின் முதல் மக்களவையில் (லோக்சபா) எதிர்க்கட்சி எது?
4. முதல்இந்தியத்தேர்தல் ஆணையரின் பெயர் என்ன?
5. நவீன அறிவியலின் தந்தை என்று போற்றப்படும் அறிவியலாளர் யார்?
6. மின் காந்தங்களை உருவாக்க பொதுவாக எந்த உலோகம் பயன் படுத்தப்படுகிறது



விடைகள்
12 ஆம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்
ஜனசக்தி
மலர் 86 இதழ் 50

# இந்தியர்கள் எந்த மதம்? ரணகளப்படுத்த திட்டமிட்ட சதி

மோடி அரசு கொண்டு வந்த தேர்தல் பத்திரத் திட்டம் சட்டவிரோதமானது; அது செல்லாது என்று நெற்றி பொட்டில் அடித்து தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், பத்திரம் பற்றிய விவரங்களை வெளியிடுமாறு உத்தரவிட்டது.

ஸ்டேட் வங்கி விவரங்களை வெளியிட முன் வரவில்லை. மாறாக ஜூலை கடைசி வரை கால அவகாசம் கேட்டது.

நாடாளுமன்றத் தேர்தல் முடியும் வரை விவரங்கள் வெளிவரக் கூடாது என்று பின்னிருந்து இயக்குபவர் மோடி அல்லவா! இதை உச்ச நீதிமன்றம் ஏற்கவில்லை.

பிப்ரவரி 15ஆம் தேதி தீர்ப்பு சொன்னோம், இன்று மார்ச் 11ஆம் தேதி. 26 நாட்களாக என்ன செய்து கொண்டு இருந்தீர்கள் என்று நீதிபதிகள் சாட்டை எடுத்திருக்கிறார்கள்.

'அது ரகசியம் என்பதால் பத்திரமாக வைத்திருக்கிறோம். அதனை உடனடியாக உடைத்து எடுத்து விட முடியாது' என்று 'மகாபாரத சக்கர வியூகம்' போல ஏதோ கதைகளை ஸ்டேட் வங்கி உச்ச நீதிமன்றத்தில் கூறியது.

ஏற்க மறுத்த உச்ச நீதிமன்றம், பத்திரங்கள் எந்த தேதியில் விற்கப்பட்டன? யார் வாங்கினார்கள்? எவ்வளவு தொகை? எந்தெந்த அரசியல் கட்சிகள், அவற்றை எந்தத் தேதியில் பணமாக்கின? என்ற விவரத்தை வெளியிட்டே தீர வேண்டும். மார்ச் 13 ஆம் தேதி மாலை 5 மணிக்குள் இந்திய தேர்தல் ஆணையத்தின் வலைத்தளத்தில் இந்த விவரங்கள் வரவேண்டும். இல்லையெனில் வேண்டுமென்றே நீதிமன்ற உத்தரவுக்கு அடிபணிய மறுத்ததாக நடவடிக்கை வருமென்று கூறிவிட்டது.

இது, மோடி அரசுக்கு ஜயத்துக்கிடமில்லாத பின்னடைவாகும்.

இது செய்திகளில் விவாதிக்கப்படுவதை தடுக்க வேண்டுமெனில், இதைவிடப் பெரிய செய்தி ஒன்றை உருவாக்க வேண்டும் என்பது ஆர்.எஸ்.எஸ். – பி.ஜே.பி. யின் திட்டம். எனவே, பெரும் சர்ச்சைக்கு உள்ளான குடியுரிமை திருத்தச் சட்டத்தை கையில் எடுத்திருக்கிறார்கள்.

குடியுரிமை திருத்த சட்டத்துக்கான விதிகள் அவசர அவசரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பொருளை ஒரே வரியில் சொல்ல வேண்டுமானால், இந்தியா முஸ்லிம்களுக்கு அல்ல, இந்துக்களுக்கு மட்டுமே சொந்தமானது என்று சொல்லிவிடலாம்.

அறிவிக்கை வெளிவந்த உடனேயே டெல்லி மாநகரில் முஸ்லிம்கள் குடியிருக்கும் பகுதிகளுக்கு பாதுகாப்புப் படைகள் பெருமளவில் அனுப்பப்பட்டுள்ளன. சென்ற முறை போராட்டங்களில் துடிப்புடன் பங்கேற்றவர்களை போலீஸ் தொடர்பு கொண்டு, இந்த முறை மீண்டும் போராடத் துணிந்தால் விளைவு கடுமையாக இருக்கும் என்று எச்சரித்திருக்கிறார்கள்.

ஓங்கி அடித்தால், அடிக்கப்பட்ட பொருள் வெடிக்கும். ஆகவே திட்டமிட்டு ஒரு பதட்ட சூழ்நிலை உருவாக்கப்படுகிறது. ஒரு கலகத்தைப் பிரசவிப்பதற்கு துடியாய் துடிக்கிறார்கள். எங்கெல்லாம் கலகம் நடந்ததோ அங்கெல்லாம் தேர்தல்களில் பிஜேபி வென்றிருக்கிறது என்பது கண் கூடு.

சிதறிக் கிடந்த எதிர்க்கட்சிகள் கொஞ்சம் கொஞ்சமாக ஒன்றுபடுவது ஆர்.எஸ்.எஸ். ஐ பதற வைத்திருக்கிறது. வெற்றி பெறுவதற்கு எந்த எல்லைக்கும் செல்ல அவர்கள் தயங்க மாட்டார்கள்.

மசூதிக்குள் இடமில்லாமல் தெருவில் மண்டியிட்டு தொழுத முஸ்லிம் சகோதரர்களை காவல்துறையைச் சேர்ந்தவர் காலால் மிதித்து ஒதுக்கி தள்ளிய காட்சியை நாடே பார்த்தது. இது ஒரு சாம்பிள் தான்.

அசாம் முதலமைச்சரான ஹிமந்தா பிஸ்வா சர்மா, இந்தச் சட்டத்தை எதிர்த்து போராடும் கட்சிகளுடைய பதிவு ரத்து செய்யப்படும் என்று பகிரங்கமாக எச்சரித்திருக்கிறார்.

இது முஸ்லிம்களுக்கு புனிதமான ரமலான் மாதம். அமைதி, கொடை, நீதி ஆகியவற்றை வலியுறுத்தும் மாதம். இந்தச் சமயத்தில் விதிகளை குறித்து அறிவிக்கை வந்திருப்பது சாதாரணமானதல்ல; பெருத்த உள்நோக்கம் கொண்டது.

இந்தியாவில் பிறப்பதும், இந்தியர்களுக்கு பிறப்பதும் தான் இதுவரை இந்தியக் குடியுரிமைக்கான தகுதியாக இருந்தது. முதல் முறையாக எந்த மதத்தைச் சார்ந்தவர் என்பது குடியுரிமைக்கான ஆதாரமாக மாற்றப்படுகிறது. இந்தியாவின் மதச்சார்பின்மை மீது ஒரு வலுவான கத்திக் குத்து.

பிஜேபியின் கூட்டணி கட்சிகள், எந்த முஸ்லிம் பாதிக்கப்பட்டார் என்று காட்டுங்கள் என்று கேட்கிறார்கள். சட்டம் அமலான பிறகு தானே என்ன நடக்கிறது என்று புரியும். முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல, ஒரு கட்டத்தில் இந்துக்களுக்கும் பாதுகாப்பு இல்லாத நிலைமை இந்த சட்டத்தால் உருவாக்கப்படும்.

மோடியை, ஆர்.எஸ்.எஸ். ஸை, ஆட்சியிலிருந்து அகற்றாவிட்டால் எத்தகைய ரணகளத்துக்கு நாடு ஆளாகும் என்பதற்கு இதுவும் ஒரு எச்சரிக்கை.

## பெண்கள், சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைக்கு முடிவுகட்ட கோரி

# மாதர் சங்கம் பிரச்சார இயக்கம்




மதச்சார்பற்ற ஜனநாயக அரசியலை முன்னெடுப்போம்! பெண்கள்சிறுமிகள் மீதான அனைத்து பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக உறுதியான போராட்டத்தை கட்டமைப்போம் என்ற மக்கள் சந்திப்பு இயக்கம் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் சார்பில் மார்ச் 8 அன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது.

***தஞ்சை:*** மார்ச் 8 மகளிர் தினத்தை முன்னிட்டு இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில் தஞ்சாவூர் சிவகங்கை பூங்காவில் இருந்து புறப்பட்ட பேரணி பனகல் கட்டிடம் வந்தடைந்து, தெருமுனை கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாதர் சங்க மாவட்ட செயலாளர் ம.விஜயலட்சுமி தலைமை வகித்தார்.

பேரணியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்துஉத்ராபதி துவக்கி வைத்தார். மாவட்ட நிர்வாகிகள் தனசீலி, ஸ்ரீதேவி, கண்ணகி, கல்யாணி, மீனா ஆகியோர் பங்கேற்று பெண்கள் தின உரிமை குறித்து உரையாற்றியார்கள். (படம்)

***குமரி:*** குமரி மாவட்ட குழுவின் சார்பில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மக்கள் சந்திப்பு இயக்கம் நடைபெற்றது. குமரி மாவட்ட செயலாளர் ஆர். செல்வராணி தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் பி.விஜயலட்சுமி இயக்கத்தை துவக்கி வைத்தார். கட்சியின் மாவட்ட செயலாளர் சுபாஷ் சந்திர போஸ், அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் மாநில துணைத்தலைவர் பேராசிரியர் சுந்தரம், கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் சுரேஷ் மேசியதாஸ், ஏ.ஐ.டி.யு.சி.யின் மாவட்ட தலைவர் எஸ் .அனில் குமார், மாதர் சம்மேளனத்தின் மாவட்ட குழு உறுப்பினர்கள் தங்கம், செல்வ சுமதி ஆகியோர் மக்கள் சந்திப்பு இயக்கத்தின் நோக்கங்களை விளக்கி பேசினார்கள். நிகழ்ச்சிகளை தெருப்பாடகர் நெல்சன் தொகுத்து வழங்கினார்.

***செங்கல்பட்டு:*** தமிழ்நாடு ஜெனரல் ஒர்க்கர்ஸ் சங்கத்தின் கிளை சங்கமான ஏர்போர்ட் ஏ ஐ டி யு சி தூய்மை பணியாளர் சங்கத்தின் சார்பில், திரிசூலம் சமுதாய நலக் கூடத்தில் சங்கத் துணைத் தலைவர் எச். தவச்செல்வி தலைமையில் நடைபெற்றது. செயலாளர் எம். வீரன் அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி பங்கேற்று சிறப்பித்தார்:

சங்கத் தலைவர் கே. இரவி துவக்கி வைத்தார். தேசிய செயலாளர் வகிதா நிஜாம் மகளிர் தின வரலாறு குறித்தும், பெண்களுக்கான பணியிட பாதுகாப்பு குறித்து உரையாற்றினார். மாவட்ட பொதுச் செயலாளர் எம். ஜஹாங்கிர் முடித்து வைத்தார்.

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்ட செயலாளர் மருத்துவர் ஏ.ஆர். சாந்தி, திரிசூலம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் சரஸ்வதி ஜெய்சங்கர், மன்ற உறுப்பினர் சௌமியா சங்கரதாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். சங்க துணைச்செயலாளர் இ. பரமேஸ்வரி நன்றி கூறினார்.

***தென்காசி:*** தென்காசி மாவட்டம் புளியங்குடியில் மாவட்ட தலைவர் எஸ். பாக்கியம் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர் தி. சதன்திருமலைக்குமார், மாவட்ட செயலாளர் தி. இசக்கித்துரை, மாதர் சங்க மாவட்ட செயலாளர் சண்முகவடிவு, அரசு மருத்துவர் அபிநயா, நகர்மன்ற தலைவர் விஜய பாண்டியன், மூத்த தோழியர் சரஸ்வதி உள்ளிட்ட 200 பெண்கள் கலந்து கொண்டனர்.

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

தொகுதி பங்கீடுகள் எல்லாம் மிக வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது நன்கு அறிவீர்கள்.

நமது கட்சி கடந்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நாகை மற்றும் திருப்பூர் ஆகிய இரு தொகுதிகளை மீண்டும் நாம் பெற்றுள்ளோம்.

இரு தொகுதிகள் அல்ல, புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் நமது கட்சி போட்டியிடுகின்றது என்கிற அரசியல் உணர்வுடன் அர்ப்பணிப்போடு களப்பணிகள் ஆற்றுவோம்!

கபடதாரிகளையும் அவர்களுக்குத் துணை போனவர்களையும், போய்க்கொண்டு இருப்பவர்களையும் மக்களிடம் தோலுரித்துக் காட்டுவோம்.

தேர்தல் என்னும் மகத்தான போரில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு போர் புரிவோம்!

நாட்டின் விடுதலைக்காக போர்க்களம் கண்ட, ரத்தம் சிந்திய சித்திரவதைகளுக்கு உள்ளான, உயிரைக் கொடுத்த தியாகிகளை நினைவு கூர்வோம்!

அவர்களுடைய தியாகத்தின் பேரால் சபதம் ஏற்போம். கபடதாரிகளை அம்பலப்படுத்தி மக்களிடமிருந்து அந்நியப்படுத்துவோம்.

எதிரிகள் எவரும் காப்புத்தொகையை திரும்பப் பெற முடியாமல் செய்திட களப்பணி ஆற்றிடுவோம்.

நாற்பதும் நமதே! நாடும் நமதே என சங்க நாதம் எழுப்புவோம்! போர் தொடங்கி விட்டது. போர் முரசு ஒலித்து விட்டது. இனி நமக்கேது ஓய்வு?


இரவு, பகல் பாராமல் பணியாற்றி வெற்றி ஒன்றே எங்கள் குறிக்கோள் என பணியாற்றுவோம்.

வெற்றி பெறுவோம்!

மீண்டும் சந்திப்போம்!

வணக்கம்

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

அளித்தார். இதன்படி 10 ஆண்டுகளில் 20 கோடிப் பேருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி எதுவும் செய்யவில்லை. வேலையில் இருப்பவர்களும் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

கறுப்புப்பணம் மீட்கப்படும். அந்தப் பணம் மீட்கப்பட்டு, ஒவ்வொரு குடிமகனின் வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் போடப்படும் என வாக்குறுதி அளித்தார். அதனை நிறைவேற்றவில்லை.

எம்.எஸ்.சாமிநாதன் குழு பரிந்துரை அடிப்படையில் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படும் என்று மோடி கூறினார். அதனையும் நிறைவேற்றவில்லை.

இப்படிக் கொடுத்த எந்த வாக்குறுதியையும் அவர் நிறைவேற்றவில்லை. இவற்றில் இருந்து திசைதிருப்ப குடியுரிமை திருத்தச் சட்டம் அமுலாக்கப்படும் என அறிவித்துள்ளார். மத ரீதியாக மக்களைப் பிளவுபடுத்தி, அரசியல் ஆதாயம் தேடும் குறுகிய நோக்கத்தில் மோடி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

ஜனநாயகத்திற்கு எதிராக, அரசியல் அமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாக, மதச்சார்பின்மைக்கு விரோதமாக பிரதமர் மோடியும் பாஜகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் எதிராக, மோடியின் பாசிசத்துக்கு எதிராக நாட்டின் ஜனநாயகத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இந்தியா கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

# போதைக் கும்பலால்



# சீரழிக்கப்பட்டப் பேதைச் சிறுமி

**இந்தியாவின் ஒரு சிறு நிலப் பகுதியாக உள்ள புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு என்று நீண்ட நெடிய வரலாற்றுப் பாரம்பரியமும் பெருமையும் உண்டு.**

புதுச்சேரியை மதுச்சேரி என்று கூட கடந்த காலங்களில் தமிழகத்தைச் சேர்ந்த பலர் குறிப்பிட்டனர். மதுச்சேரியாக இருந்த அந்தக் காலகட்டத்தில் கூட போதைச்சேரியாக புதுச்சேரி மாறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கனிம வளம், தொழில் வளம் இல்லாத பகுதி என்பதால் மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ள பகுதி என்பதாலும் புதுச்சேரி அரசின் மொத்த செலவினத்தில் 90 சதவீதத்தை மானியமாக மத்திய அரசு நேரடியாக வழங்கியது. இதன் காரணமாக எவ்வித நெருக்கடியும் இல்லாமல் கடந்த கால ஆட்சிகள் நடைபெற்றன.

1990களில் ஏற்பட்ட பொருளாதார கொள்கைகள் மாற்றம் காரணமாக மத்திய அரசின் மானியம் என்பது படிபடியாகக் குறையத் தொடங்கியது. அந்த வருமான இழப்பை மாநில அரசின் விற்பனை வரி, மதுபான விற்பனை மூலம் கிடைத்த கலால் வரி, நில விற்பனை மூலம் கிடைத்த பத்திரப்பதிவு வரி ஆகியவை மூலம் பெற்று வந்தது. கூடுதல் தேவைக்கு மத்திய அரசு மூலம் வெளிச் சந்தைகளில் வட்டிக்கு கடன் வாங்கத் தொடங்கியது புதுச்சேரி அரசு.

மத்தியில் பிஜேபி அரசு பொறுப்பு ஏற்ற பின்னர், கடந்த பத்தாண்டுகளில் அவர்கள் பின்பற்றிய ஜி.எஸ்.டி. வரி விதிப்பு, நிதிப் பங்கீடு ஆகிய கொள்கை நடைமுறைகள் காரணமாக மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு என்பது புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு வெகுவாக குறைந்தது. மத்திய அரசு மான்யம் என்பது 30 சதவீதத்திற்கும் கீழ் ஆனது. கடன் நிலுவை வட்டி என கடன் சுமையும் அதிகரித்தது.

இந்த நிதிப் பிரச்சனை தீர, மாநில அந்தஸ்து தேவை என்பது அனைத்து



அரசியல் கட்சிகள் உணர்ந்து, பலகட்டப் போராட்டங்களை நடத்தினர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1971ஆம் ஆண்டு முதல் மாநில அந்தஸ்து குறித்து வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

2021ல் நடைபெற்ற தேர்தலில் என். ஆர். காங்கிரஸ் பிஜேபி கூட்டணி அமைத்து போட்டியிட்டு வெற்றி பெற்றது. ஆட்சி அமைத்தவுடன் மாநில அந்தஸ்து, நிதி நெருக்கடி தீர்வு, கடன் தள்ளுபடி ஆகியவை குறித்து மத்திய பிஜேபி அரசு மூலம் தீர்வு காண்போம் என்ற முதல் அமைச்சர் ரங்கசாமியின் அறிவிப்புகள் கானல் நீரானது.

நிதி நெருக்கடியால் இலவசத் திட்டங்களை நடைமுறைப் படுத்த முடியாமல் துணை நிலை ஆளுநர், உயர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தலையீடு நிர்பந்தம் காரணமாக கடும் நிர்வாக நெருக்கடிகளுக்கு உள்ளாயின. முதல் அமைச்சர் ரங்கசாமியை அதிகாரிகள் மதிப்பதில்லை, நிதி நெருக்கடி, துணை நிலை ஆளுநர் தலையீடு என்று தொடர்ச்சியாக பகிரங்கமாக புலம்பத் தொடங்கினார்.

இத்தகைய சூழலில்தான் வருவாய் பெருக சுற்றுலா மேம்பாடு என்று அறிவித்தார் முதல் அமைச்சர்.கட்டுப்பாடற்ற மது விற்பனை, தடையற்ற தங்கும் இடங்கள், கடற்கரை என பல காரணங்களால் வார இறுதி நாட்களில் புதுச்சேரியை நோக்கி பெங்களூர், சென்னை போன்ற பெரும் நகரங்களில் ஐ.டி. துறையில் பணியாற்றக் கூடிய ஆயிரக்கணக்கான இளைஞர்கள், இளம்பெண்கள் குவியத் தொடங்கினார்கள்.

இதன் காரணமாக மது விற்பனை அதிகரித்தது. தங்கும் விடுதிகள் நெருக்கடி ஏற்பட்டதால் பல குடியிருப்புகள் மத்தியில் வீடுகள் எல்லாம் தற்கால விடுதிகளாக மாறியன.

சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை அதிகரித்ததால் கலால் துறையைத் தன் வசம் வைத்து இருந்த முதல் அமைச்சர் ரங்கசாமி தனக்கு வேண்டிய பலருக்கு ரெஸ்ட்டோபார் நடத்த அனுமதி அளித்தார். இங்கு விடிய விடிய மதுபானம் விற்பனை செய்யவும், ஆபாச நடனம் நடத்திக் கொள்ளவும் அனுமதி அளித்தார்.

குடியிருப்புகளுக்கு அருகில், பள்ளிகளுக்கு அருகில், கோவில்களுக்கு அருகில் ரெஸ்டோபார் நடத்த அனுமதி அளிப்பதை எதிர்த்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்பட பல அரசியல் கட்சிகள், மாதர் அமைப்புகள் போராடின.

ஆனால் முதல் அமைச்சர் ரங்கசாமி மாநில அரசின் வருவாய் பெருகத் தான் ரெஸ்டோபார் லைசென்ஸ் வழங்கப்பட்டது என்று கூறி மௌனமானார்.

இந்தச் சுற்றுலா பயணிகளைக் குறிவைத்து கஞ்சா வியாபாரக் கடை விரித்தனர் சிலர். குறிப்பாக பள்ளி கல்லூரி சிறுவர்கள் சிலரை ஆரம்பத்தில் குறிவைத்து தங்கள் வசமாக்கி, முதலில் பணத்தைக் கொடுத்து, பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக போதைக்கு அடிமைப்படுத்தி போதை பொருள் விற்பனை சந்தையை விரிவுபடுத்தினார்கள்.

பள்ளியில் படிக்கும் மாணவர்கள் பலர் போதைப் பழக்கத்திற்கு ஆளாகி பள்ளி வளாகத்தில் மோதிக் கொள்வது, கண்டிக்கும் ஆசிரியர்களை தாக்குவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வந்தனர். இதனைக் கண்டித்து இளைஞர் பெருமன்றம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் போன்ற அமைப்புகள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவ்வப்போது காவல் துறை கஞ்சா விற்பனை செய்பவர்களைக் கைது செய்ததாக அறிவித்தாலும் கூட உரிய வழக்கு பதிவு செய்து கடுமையான தண்டனைகள் பெற்றுத் தருவதில்லை. இதற்குக் காரணம் கஞ்சா கும்பலுடன் காவல் துறைக்கு உள்ள தொடர்பு தான் என்று பகிரங்கமாக குற்றம் சாட்டப்பட்டது.

கஞ்சா விற்பனை மையமாக வில்லியனூர் பகுதி செயல்படுவதும், உள்துறை அமைச்சரின் ஆதரவாளர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டதும் காவல் துறை அறியாதது அல்ல.

கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் ஒழிக்க காவல்துறையில் தனிப்பிரிவு உருவாக்கப்பட்டது. ஆனால் அந்தப் பிரிவுக்கு எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை என்பதால் அந்தப் பிரிவு முடங்கியுள்ளது என்பதை அரசு கவனத்தில் கொண்டு செயல்படுவது அவசியம்.

இன்றைக்கு புதுச்சேரியில் சுற்றுலாப் பயணிகளை மையப்படுத்தி போதைப் பொருட்கள் விற்பனை அதிகரித்தது என்றாலும், அது உள்ளூர் வேலையற்ற இளைஞர்களையும், மாணவர்களையும் வெகுவாக பாதிக்கிறது என்பதை அரசு உணர்ந்து கொள்ளவேண்டும்.

இனி எதிர்காலத்தில் போதை கயவர்களால் பேதைச் சிறுமிகள் படுகொலைக்கு ஆளாவதைத் தடுத்து நிறுத்த மதுபான கடைகள் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். விற்பனை நேரத்தைக் குறைக்க வேண்டும். மது விற்பனை வரி வருவாய் மட்டுமே கணக்கில் கொள்ளக்கூடாது.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் மத்தியில் போதை பொருட்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

போதை பொருட்கள் விற்பனை நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும், குற்றவாளிகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும் தனியாக உரிய அதிகாரங்களுடன் போதை பொருள் தடுப்பு பிரிவு உருவாக்க வேண்டும்.

போதை பொருள் விற்பனை குற்றவாளிகள் மீது கடுமையான பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து கடுமையான தண்டனை பெற்று தரவேண்டும்.

கஞ்சா சேரியாக புதுச்சேரி மாறும் அவலத்தைப் போக்கிட அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவது காலத்தின் தேவைமட்டுமல்ல, எதிர்கால தலைமுறையைப் பாதுகாக்கும் செயலாகும்.

**- புதுவை ஜீவன்**

## மக்கள் போராடியதற்குக் கிடைத்த வெற்றி

**தெருவில் விளையாடிக் கொண்டிருந்த 9 வயது சிறுமியைக் கடத்திச் சென்று, வீட்டில் அடைத்து வைத்து, சீரழித்து கொலை செய்து சாக்கடையில் மூட்டை கட்டி வீசியது என்பது போதையின் கொடூரங்களில் ஒன்று.**

**சிறுமி காணாமல் போனது குறித்து புகார் அளித்தும் சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் துரிதமாக செயல்படவில்லை என்று எழுந்த புகாரை ஒட்டி சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் பணிபுரிந்த அனைவரையும் பணி இடமாறுதல் செய்து, துரித விசாரணைக்கு உத்தரவிட்டது என்பது புதுச்சேரி மக்கள் ஒன்று திரண்டு வீதியில் இறங்கி போராடியதற்குக் கிடைத்த வெற்றி.**



**குற்றவாளிகள் என்று தொடர்புடைய இருவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். உயர் அதிகாரிகள் நேரடியாக புலன் விசாரணையை மேற்கொண்டுள்ளது, விரைவு நீதிமன்றம் அமைத்து குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனைகள் பெற்று தருவோம் என்று அரசும் காவல் துறையும் அறிவித்துள்ளது.**

# மார்க்சின் வர்க்கமும் புத்தரின் துக்கமும்



எஸ்.தோத்தாதிரி

**அண்மையில் ஒருவர் பேசும் பொழுது, மார்க்ஸ் கூறியதெல்லாம் தொல்காப்பியர் கூறிவிட்டார். கம்பர் கூறிவிட்டார் என்று குறிப்பிட்டார். அதேபோல அண்மை காலத்தில் மார்க்ஸ் கூறியதை புத்தர் கூறிவிட்டார் என்ற குரலும் ஒலிக்கிறது.**

இங்கு கம்பர் பற்றி ஜீவா முன்வைத்த விளக்கத்தை, இந்த கூற்றுகளுக்குள்ளே கொண்டு வரக்கூடாது என்பதையும் குறிப்பிட வேண்டும். ஏனென்றால் ஜீவாவின் அணுகுமுறை வேறு, இவர்களின் அணுகுமுறை வேறு என்பதை மட்டும் சுட்டிக்காட்டி விட்டு மேலே செல்வோம்.

புத்தரையும், மார்க்ஸையும் இணைத்து பேசுபவர்கள் புத்தர் கூறும் “துக்கம்” என்பதை எடுத்துக் கொள்கிறார்கள். துக்கம் என்பதனை வர்க்க முரண்பாடுகளுக்கு சமமாகக் காண்கிறார்கள். இதற்காக அவர்களது போக்கில் இதற்கு விளக்கமும் அளிக்கிறார்கள். இது அகவயப்படுத்தப்பட்ட வடிவமே அன்றி நடைமுறை சார்ந்த விளக்கமாகாது.




இப்பொழுது துக்கம் என்பது என்ன என்று காணலாம். இதற்கு பௌத்தத்தில் இன்னல், கஷ்டம் என்று பொருள் கொள்ளப்படுகிறது. மனிதர்கள் கஷ்டப்படுவதற்கு காரணம் அவர்களிடம் உள்ள ஆசை என்று புத்தர் கூறுகிறார். எனவே வாழ்க்கையில் உள்ள துன்பங்களை விட்டு ஒழிப்பதற்கு வழி 'ஆசை' என்பதை அகற்றுவதாகும்.

“பற்றற்றான் பற்றினை” என்று குறள் கூறும் இதே கருத்தை தான் ஏறத்தாழ ஜைனமும் முன்வைக்கிறது.

“துக்கம்” என்பது கருத்து முதல்வாத தன்மை உள்ளது. ஏனெனில் பௌத்தம் வேத மறுப்பு மதமாக இருந்தாலும், அதில் பொருள் பற்றி கூறப்பட்டிருந்தாலும் அதனுடைய போக்கு கருத்து முதல்வாத போக்காகும். எனவே வாழ்க்கையில் படும் கஷ்டங்களின் பிரதிபலிப்பான எண்ணம் மட்டுமே ஆகும்.

துக்கம் என்பதை எடுத்துக் கொண்டால் அரசனுக்கும் துக்கம் உண்டு. அரசன் அல்லாதவர்களுக்கும் துக்கம் உண்டு. இது எல்லாருக்கும் பொதுவாக ஆகிவிடுகிறது. அதேபோல துக்கத்தை நீக்குவதற்கான ஆசை என்பதும் எண்ணம் சார்ந்ததே ஆகும். ஆசையை விட்டு ஒழிப்பதற்கு பௌத்தம் கூறும் வழிமுறைகள், மார்க்ஸ் கூறுவது போன்ற இயங்கியல் பொருள் முதல்வாத வழிமுறைகள் அல்ல. உதாரணமாக ஆசையைவிட்டு ஒழிப்பதற்கு பௌத்தம் துறவு என்பதை முன்வைக்கிறது.



இது எப்படி இருக்கிறது என்று கேட்டால், மார்க்ஸ் காலத்தில் புரூதான் போன்ற அறிஞர்கள் சோசலிசத்தை அடைவதற்கு மனிதநேயத்தை முன்வைத்தார்கள். மனிதநேயம் என்பது எல்லாருக்கும் பொதுவானது. புரூதான் இதற்கு ஒரு வழி கூறினார்.

தீமைகள் எல்லாவற்றையும் அகற்றி விட்டால், நன்மைகள் மட்டுமே இருக்கக்கூடிய சமுதாயம் இருக்கும். இது சமத்துவம் என்று கருதினார். இது கம்பன் காட்டும் கோசல நாட்டைப் போன்றது. இதைதான் மார்க்ஸ் கற்பனாவாத சோசலிசம் என்றார். இதனை வர்க்க போராட்டத்திற்கு சமமாக காண முடியாது.

வர்க்கம் என்பது பொருள் முதல்வாதத் தன்மை உள்ளது. புத்தர் பேசுவது என்பது கருத்து முதல்வாதத் தன்மை உள்ளது. மார்க்ஸ் பேசுவது சமுதாயத்தை மாற்றுவதற்கான தத்துவம். புத்தர் பேசுவது சமூக நிகழ்ச்சிகளை விளக்கும் தத்துவம்.

மார்க்ஸ் அவருடைய பாயர்பா ஆய்வுரையில் கடைசியாக ஒன்றை கூறுகிறார் “இதுவரை உள்ள தத்துவவாதிகள் உலகத்தை விளக்கினர். ஆனால் தத்துவத்தின் வேலை விளக்குவது அல்ல. உலகத்தை மாற்றுவதாகும்”. மார்க்ஸ் தனக்கு முந்தி உள்ள தத்துவவாதிகள் அனைவரையும் ஒரு அணியில் வைத்துக் கொண்டு, இயங்கியல் பொருள் முதல்வாதம் நடைமுறை சார்ந்து உலகத்தை மாற்ற வேண்டும் என்று கூறினார். இதன் காரணமாக நிகழ்கால சமுதாயத்திற்கு மாற்றாக 'சோசியலிசத்தை' முன் வைக்கிறார்.

புத்தர் ஒரு மனிதநேயவாதி. மார்க்சும் ஒரு மனிதநேயவாதி. ஆனால் இருவருக்கும் ஒரு வேறுபாடு உண்டு. புத்தர் எல்லோரிடமும் அன்பு காட்டும் முறையை கையாளுகிறார். அவருடைய மனிதநேயம் எல்லாரையும் நேசிக்கும் தன்மை உள்ளது. ஆளுபவர்களையும் அவர் நேசிக்கிறார். அடிமைப்பட்டவர்களையும் அவர் நேசிக்கிறார்.

அவர் துறவியானதற்கு ஒரு கதையைக் கூறுவார்கள். அவர் ஒரு நோயாளியையும், கிழவனையும் காண்கிறார். ஒரு பிணத்தையும் காண்கிறார். இதிலிருந்து அவர் உலகம் துன்பமயமானது என்ற முடிவுக்கு வருகிறார். இது மனித குலம் அனைத்திற்கும் பொதுவானது. மனிதனை ஒரு இன ஜீவியாக மட்டும் காணும் போக்காகும். ஆனால் மார்க்ஸ் அவ்வாறு அல்ல. சுரண்டுபவனையும், சுரண்டப்படுபவனையும் ஒரே தராசில் வைத்து பார்க்கும் பார்வை மார்க்சின் பார்வை அல்ல.

சுரண்டலுக்கு உள்ளான வர்க்கத்தின் சார்பாக நின்று அவர் மனிதனைப் பார்க்கிறார். சுரண்டும் வர்க்கம் ஒழிந்தால் தான் சுரண்டப்பட்ட வர்க்கம் விடுதலை பெற்று மனிதனாக இருக்க முடியும் என்று மார்க்ஸ் நிலை நாட்டுகிறார்.

இது புரட்சிகர மனித நேயமாகும். இந்த இரண்டிற்கும் வேறுபாடு உள்ளது. இவற்றை கவனிக்காமல் மார்க்ஸ் கூறும் வர்க்கம் என்பதும், புத்தர் கூறும் துக்கம் என்பதும் ஒன்றுதான் என்று கூறுவது சரியல்ல.

தொடர்புக்கு: 9894783657

## வர்க்கப் போராட்டம்

வர்க்கப் போராட்டம் என்பது மார்க்சியத்திற்கு மட்டுமே உரித்தானது. அதனால் தான் அவருடைய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை என்ற நூலில் இதுவரை உள்ள வரலாறு எல்லாம் வர்க்கப் போராட்ட வரலாறு என்று கூறுகிறார். இந்த கண்ணோட்டத்தில் புத்தர் காலத்தைய சமுதாயத்தைக் கண்டவர் அல்லர். புத்தர் காலத்தில் இனக்குழு சமுதாயங்கள் அழிந்து, வர்க்க சமுதாயம் உருவாகி கொண்டு இருந்தாலும், அதனை அவர் காணவில்லை.

மார்க்சியத்தின் படி 'வர்க்கம்' என்பது பொருளாதார வகையினம் ஆகும். ஒவ்வொரு வர்க்கமும், சமூக அரங்கில் ஒவ்வொரு வகையான பொருளாதார நலன்களை பின்புலமாகக் கொண்டிருக்கும். இதன் அடிப்படையில் தான் அதன் செயல்பாடுகள் நடக்கும்.

இதன் காரணமாக பல்வேறு வகையான சிந்தனை வடிவங்களை அவர்கள் உருவாக்கிக் கொள்கிறார்கள். ஒவ்வொரு காலகட்டத்திலும் உற்பத்தி முறையும், உற்பத்தி உறவுகளும் அந்த காலகட்டத்தை தீர்மானிக்கின்றன. இது வரலாற்று பொருள் முதல்வாத அணுகு முறையாகும்.

# தமிழகத்தில் வாக்கு கேட்கிற தார்மீக உரிமை மோடிக்கு இல்லை

கோவை, 'ஜீவா இல்லத்தில்' இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் இரா.முத்தரசன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் தமிழகத்தில் வாக்கு கேட்கிற தார்மீக உரிமை மோடிக்கு இல்லை என்று கூறினார்.

அவர் தனது பேட்டியில், “இன்னும் சில தினங்களில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட வாய்ப்புள்ளது. இந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்படவும், ஜனநாயகம் காப்பாற்றப்படவும், அரசியலமைப்புச் சட்டம் காப்பாற்றப்படவும் வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்புகள் பாதுகாக்கப்பட, இன்றைக்கு இருக்கக்கூடிய மோடி தலைமை யிலான ஆட்சி அகற்றப்பட வேண்டும். இல்லை என்று சொன்னால் நாடு பேராபத்தை சந்திக்கும்.




இரா. முத்தரசன் பேட்டி

இந்திய அளவிலும் நல்ல கூட்டணி உருவாகி இருக்கிறது. பீகார், உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் தொகுதி உடன்பாடுகள் நல்ல முறையில் ஏற்பட்டுள்ளது. இந்த தேர்தலை இந்தியா கூட்டணி கொள்கை ரீதியாக எதிர்கொள்ளும். பாரதிய ஜனதா கட்சியினுடைய அராஜகங்களுக்கு இந்த தேர்தல் முற்றுப்புள்ளி வைக்கும்.

தேர்தல் ஆணையம் என்பது அரசியல் அமைப்பு சட்டம் வழங்கிய உரிமை. அதையே மோடி அரசாங்கம் கேள்விக்குறியாகிவிட்டது.

பிரதமர் நாடு முழுவதும் பயணம் மேற்கொள்கிறார். அப்போதெல்லாம் ஊழல் பற்றி அவர் பேசுகிறார். பிரதமர் தான் ஒருபோதும் ஊழலை அனுமதிக்க மாட்டேன் என்று சொல்லுகிறார்.

கார்ப்பரேட் நிறுவனங்கள், பெரிய வியாபாரிகள், தேச உடமையாக்கப்பட்டுள்ள வங்கிகளில் இருந்து கடன் பெறுகிறார்கள். அவர்கள் பெறுகிற கடனை திரும்ப செலுத்துவதில்லை. வட்டியும் செலுத்துவதில்லை. அவை அனைத்தும் வராக் கடனாக மாற்றப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டு வருகிறது.

வைர வியாபாரி நீரவ் மோடி வங்கியில் நூறு கோடி கடன் பெற்றார். அவர் கடனை திருப்பி செலுத்தவில்லை. நீதிமன்றம் உடனடியாக 60 கோடி ரூபாய் திருப்பி செலுத்த வேண்டும் என்று உத்தரவு போட்டது. ஆனால் அவர் இதுவரை செலுத்தப்படவில்லை.

இது போன்றவர்கள் தான் மோடியின் நண்பர்கள். எனவே, மோடிக்கு ஊழல் பற்றி பேச அருகதை இல்லை. இந்தியாவில் இருக்கிற 140 கோடி மக்களும் என் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்று மோடி பேசுகிறார். குடும்பத்தை பற்றி எல்லாம் பேசுவதற்கு மோடிக்கு என்ன அருகதை இருக்கிறது.

மோடி பேசும்போது தொழில் துறை சிறப்பாக உள்ளது. பஞ்சாலைகள் சிறப்பாக செயல்படுகிறது என்று சொல்கிறார். ஆனால் அரசாங்கத்தால் நடத்தப்படும் மில்களை மூடிக் கிடக்கிறது. என்.டி.சி. ஆலைகள் இந்தியாவில் 23, தமிழகத்தில் மட்டும் 7, குறிப்பாக கோவையில் மட்டும் ஐந்து, இவை அனைத்தும் 2020 ல் இருந்து மூடப்பட்டு கிடக்கின்றன. அரசு அச்சகம் மிகப்பெரிய நிறுவனம் பெரியநாயக்கன்பாளையத்தில் தான் இருக்கிறது. அதுவும் மூடப்பட்டு கிடக்கிறது. பிரதமர் பொறுப்பு என்பது மிக உயர்ந்த பொறுப்பு. அந்த பொறுப்பில் இருக்கக்கூடிய ஒரு நபர் பொய் சொல்லக்கூடாது.

சென்னையில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்பட்டது. திட்டத்திற்கு மாநில அரசு 500 கோடி ரூபாய் என்று சொன்னால், ஒன்றிய அரசு 500 கோடி தர வேண்டும். இதுவரை ஒரு பைசா கூட ஒன்றிய அரசு தரவில்லை. ஆனால் மோடி சென்னையில் பேசுகிற போது எங்களுடைய அரசு மெட்ரோ ரயில் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துகிறது என்று அப்பட்டமாக பொய் பேசுகிறார்.

பேரிடர் நிவாரண நிதி என்று ஒன்றிய அரசால் தனியாக ஒரு நிதி பராமரிக்கப்படுகிறது. இந்த குழுவிற்கு பிரதமர் தான் தலைவர். ஆனால் ஏன் தமிழகத்திற்கு பேரிடர் நிதி கொடுக்க மறுக்கிறார்கள் என்பது தெரியவில்லை. தமிழகத்திற்கு எந்த உதவியும் செய்யாமல், மக்கள் பாதிக்கப்பட்டு நிற்கதியாக நிற்கிற பொழுது கூட உதவி செய்யாத பிரதமருக்கு தமிழகத்தில் ஓட்டு கேட்க என்ன உரிமை இருக்கிறது. தமிழகத்திற்கு வருவதற்கு மோடிக்கு தார்மீக ரீதியான உரிமை இல்லை என்று கூறினார்.

இந்த பேட்டியின் போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் நா. பெரியசாமி, மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட துணைச் செயலாளர் ஜே.ஜேம்ஸ் ஆகியோர் உடன் இருந்தனர்.



கே.வி.சேகுவேராதாஸ்

# புரட்சித் தீபங்கள் மாவீரர்கள் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ்

**27.09.1907ல் புரட்சிகர குடும்பத்தில் பிறந்த பகத்சிங் தனது ஆரம்ப பள்ளியில் பயிலும் போது அவரது ஆசிரியர். மாணவர்களே, உங்களது எதிர்கால லட்சியம் என்னவென்று கேட்ட போது பகத்சிங், நான் இந்த நாட்டு விடுதலைக்காக போராடப் போகிறேன் என்றான்.**

1919ம் ஆண்டு நடைபெற்ற ஜாலியன் வாலாஜாபாக் படுகொலையை நேரில் கண்டான். ஆங்கிலேயரை பழிக்கு பழி வாங்க நெஞ்சு துடித்தது.

தனது கல்லூரி படிப்பிற்காக லாகூரில் தேசிய கல்லூரியில் சேர்ந்தார். இந்த கல்லூரி லாலா லஜபதிராயினால் தொடங்கப்பட்டது. கல்லூரியில் சவின் சன்யாலுடன் தொடர்பு ஏற்பட்டது. அரசியல், பொருளாதாரம் பாடங்களை பகத்சிங் ஆழமாக படித்தார். இங்குதான் சுகதேவ், யஷ்பால், பகவதிசரண், ராஜகுரு போன்ற தோழர்கள் பழக்கமாயினர். இங்கு மிகப்பெரிய நூலகம் இருந்தது. இந்த நூலகத்தில் ரஷ்ய புரட்சி வரலாறு, மார்க்ஸ், லெனின், ஏங்கல்ஸ் நூல்கள் இருந்தன. இதனை படிக்கும் போது தான் பகத்சிங் மூளை பட்டை தீட்டப்பட்டது.

இங்குதான் நாட்டின் விடுதலைக்காக நவ்ஜவான் பாரத்சபா இயக்கம் தொடங்கப்பட்டது. பகத்சிங், ராஜகுரு, சுகதேவ், பகவதிசரண், யஷ்பால், துர்காதேவி உறுப்பினர்களாக இருந்தனர். இதன் தலைவராக பகவதி சரணும், பொது செயலாளராக பகத்சிங்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கல்லூரி வராண்டா பகுதியில் அடிக்கடி கூட்டம் நடக்கும் பகத்சிங் பேசும் போது, தோழர்களே, இந்திய நாட்டின் விடுதலையை ஆயுதம் தாங்கி போராடுவதன் மூலம் தான் பெற முடியும். அதற்காக நமது உயிரையும் தியாகம் செய்ய வேண்டும் என்று சூளுரைத்தார்.

இறுதியாக புரட்சி ஓங்குக, இன்குலாப் ஜிந்தபாத் என்று முடித்தார்.

இந்த அமைப்பின் பொதுக் கூட்டங்கள், அறிக்கைகள், துண்டு பிரசுரங்கள் மூலம் நாடு முழுவதும் பரவியது, சுரண்டல், வறுமை, சமத்துவமின்மை, சாதி ஒழிப்பு அதன் கொள்கைகளாகும். பகத்சிங் அப்போது டில்லி முதல் பீகார் வரை இயக்கங்களை கட்டியமைத்தார். இந்த காலத்தில் பிரசித்தி பெற்ற கான்பூர் சதி வழக்கு நடந்தது.

கான்பூரில் அஜய்குமார் கோஷ் சுதீந்திரநாத் பாண்டே, பி.கே. தத் ஆகியோர் அவ்வப்போது சந்தித்து பேசினார்கள். சிதறிகிடக்கும் புரட்சிகர இயக்கங்களை ஒன்றிணைத்து புரட்சிகர சோஷலிச சமூகத்தை உருவாக்குவது என்று முடிவு செய்யப்பட்டு இந்துஸ்தான் சோஷலிஸ்ட் குடியரசு இராணுவம் என்ற ஒரே அமைப்பாக செயல்பட தொடங்கியது. அதன் பொது செயலாளராக பகத்சிங்கும், அதன் தளபதியாக சந்திரசேகர ஆசாத்தும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

1928 ஆம் ஆண்டு பிப்ரவதி 3ம் தேதி சைமன் குழு இந்தியா வந்தது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து சைமனே திரும்பி போ, சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை, ஆங்கில ஏகாதிபத்தியம் ஒழிக என கருப்பு கொடி காட்டி போராட்டம் நடத்தினார்கள்.

இதே கால கட்டத்தில் தான் ஆங்கிலேய அரசு "தொழில் பாதுகாப்பு சட்டம்" என்ற பெயரில் பொதுபாதுகாப்பு மற்றும் தொழில் தகராறு மசோதா கொண்டு வர ஏற்பாடு செய்தனர் (Public Safety and Trade Disputes Bill) 1929 ஏப்ரல் மாதம் சட்டசபையில் சட்டம் இயற்ற முடிவு செய்யப்பட்டது. இந்த நாசகார சட்டத்தை எதிர்த்து பம்பாய், டில்லி, கல்கத்தா, சென்னை, கான்பூர், அலகாபாத் போன்ற நகரங்களில் போராட்டம் நடைபெற்றது.

இதில் எஸ்.ஏ.டாங்கே, முசாபர் அகமது, எஸ்.வி.காட்டே போன்ற 19 தலைவர்களை நாடு முழுவதும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

1929 ஏப்ரல் முதல் வாரத்தில் அங்கு கூடினர். பகத்சிங், ஆசாத், பகவதிசரண், துர்காதேவி, ராஜகுரு, சுகதேவ் கூடி ஆங்கிலேய அரசு நிறைவேற்றியிருக்கும் இப்புதிய தொழில் பாதுகாப்பு சட்டம் மிக மிக கொடூரமானது அது உழைப்பாளி மக்களை அடிமையாக்கும். இதை எதிர்த்து நாடாளுமன்றத்திற்குள் நமது விடுதலை குரல் ஒலிக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் ஆளில்லா வெளியில் குண்டு எறிய வேண்டும் என முடிவு செய்தனர்.

இதை செய்வதற்கு பகத்சிங்கும், பி.கே.தத்தும் தலைமையேற்றனர்.

யாருக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு வெடிகுண்டு தயார் செய்து வைத்தனர். அதிகமாக சத்தம் புகை மட்டுமே வரும். அது எல்லோரின் கவனத்தை ஈர்க்கும் என்று முடிவு செய்து நாடாளுமன்றத்தின் உள்ளே நுழைந்து விட்டனர். மாற்றுவழியில் நாடாளுமன்றத்தில் வைஸ்ராயின் பிரகடனத்தை ஜார்ஜ் சூஸ்டர் அறிவித்தார். அந்த கூட்டத்தில் நேரு, மாளவியா, வல்லபாய் படேல் ஆகியோரும் அமர்ந்து இருந்தனர். பகத்சிங்கும் பி.கே. தத்தும் குண்டை நடுமையத்தில் வீசினார்கள். குண்டு வெடித்தது.

ஒரே புகை மண்டலமாக காட்சியளித்தது. பகத்சிங்கும், தத்தும் இன்குலாப் ஜிந்தாபாத் (புரட்சி ஓங்குக), பிரிட்டிஷ், ஏகாதிபத்தியம் ஒழிக என்று முழங்கி கொண்டே, அச்சிட்ட நோட்டீஸ்களை நாடாளுமன்றத்தின் மையபகுதியில் வீசினர். நாங்கள் விரும்பி இருந்தால் வெடிகுண்டுகளால் நாடாளுமன்றத்தை தகர்த்திருக்க முடியும் அல்லது தப்பி சென்றிருக்க முடியும். எங்களின் இந்த சட்டத்தை எதிர்த்து இந்த நடவடிக்கைக்காக நாங்களே முன் வந்து கைதாகின்றோம் என்றனர்.

சிறையில் அரசியல் கைதிகளை சித்ரவதை செய்து கொண்டிருந்தனர். இதற்கு எதிராக சிறையில் இருந்தே போரட்டத்தை துவங்கினர். நாங்கள் கொலைகாரர்களோ, கொள்ளைக் காரர்களோ அல்ல, எங்களை அரசியல் கைதியாக நடத்த வேண்டும். நான் நாட்டின் விடுதலையை விரும்பியவன், சிறையில் அரசியல் கைதியை நல்லமுறையில் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஆங்கிலேய அரசு பரிசீலிக்கவில்லை என்றால் நான் வீரமரணம் அடையகூட தயார் என்று பகத்சிங் கூறினார். தனது 63வது நாள் உண்ணாவிரதத்தை நிறைவு செய்து பி.கே.தத் இறந்தார். அவர் இறந்த சோகத்தை கருத்தில் கொண்டு உண்ணாவிரதம் வாபஸ் பெறப்பட்டது.

தனது தாய்க்கு சிறையில் இருந்தே கடிதம் ஒன்றை எழுதினார். "தாயே, என்னை பற்றி கவலைப்படாதீர்கள் நான் நாட்டுக்காக வீரமரணம் அடைய போகிறேன். தந்தையிடம் சொல்லுங்கள். யாரிடமும் சென்று யாசகம் பெற்று எனது விடுதலையை பெற வேண்டாம் நான் மீண்டும் பிறப்பேன். அப்போது அவன் கழுத்தை தடவி பார், நான்தான் பிறந்தேன் என்பதற்கு தூக்கு கயிற்றின் தடம் தெரியும்" என்று எழுதினார்.

தூக்கிலிடப்படுவதற்கு முதல் நாள் உறவினர்களை சந்திப்பது என்பது வழக்கம். 1930 மார்ச் 24ம் தேதி தூக்கு என்று தெரிந்து லட்சக் கணக்கானோர் காத்து இருந்தனர். பகத்சிங் உனது கடைசி ஆசை என்ன என்று சிறை காவலர் வினவினர். அதற்கு பகத்சிங் எனது லட்சியம்

பாலுக்கு அழும் குழந்தை
கல்விக்காக ஏங்கும் மாணவன்
வேலை தேடி அலையும் இளைஞன்

இவைகள் இல்லாத விடுதலை பெற்ற இந்தியாவைக் காண விரும்புகிறேன் என்றார்.

அந்த மார்ச் 23 இளைஞர்களின் எழுச்சி நாளாக கடைபிடித்து வருகின்றோம். அவர் நாத்திகர். ஆனால் இப்போதைய ஆட்சி பாசிசத்தையும், மதவெறியையும் விதைக்கிறது. அன்று ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராக குரல் கொடுத்தோர். இன்று பாசிச கார்ப்பரேட் ஏகாதிபத்தியத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் பறித்து எறிவதற்கு போராடுவோம். பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் நினைவு நாளில் சபதம் ஏற்போம்,

தொடர்பு: 8144809010



## திறந்த முகத்துடன் தூக்கில்...

மார்ச் 24 அன்று தான் தூக்கு தண்டனை ஆனால் மார்ச் 23 நள்ளிரவு தூக்கு போடுவதற்கு தயராகி கொண்டு இருக்கிறது சிறை நிர்வாகம், பகத்சிங் சீக்கியர் ஆகவே பகத்சிங்கிடம் சீக்கியரின் புனித நூலான "குத்கா" வை பகத்சிங்கிடம் கொடுத்து படிக்க சொன்ன போது எனக்கு கடவுள்நம்பிக்கை இல்லை எனவே, எனக்கு இந்த புத்தகம் தேவை இல்லை என்றார். சிறை அதிகாரிகள் வந்து பகத்சிங்கை நேரம் ஆகி விட்டது வாருங்கள் என்றார்கள். சற்று பொருங்கள் "நான் புரட்சியாளரோடு உரையாடிக் கொண்டிருக்கிறேன்" என்றனர். அப்போது அவர் லெனின் எழுதிய அரசும் புரட்சியும் என்ற நூலை படித்துக் கொண்டிருந்தார். படித்து முடித்து வருகிறேன் என்று கூறினர். பகத் சிங், சுகதேவ், ராஜகுரு மூவரும் ஒருவரை ஒருவர் ஆறதழுவி கொண்டனர். பின்பு தூக்கு மேடை ஏறி வீரத்தோடு நின்றனர். அதிகாரிகள் முகத்தில் கருப்பு துணியை போட்டனர். அந்த துணியை மூவரும் அகற்ற சொன்னார்கள்.

"நாங்கள் நாட்டின் விடுதலைக்காக போராட்டியவர்கள். எங்களை உங்கள் துப்பாக்கி



தோட்டாவால் சுடுங்கள். எங்கள் இரத்தம் இந்த மண்ணிலேயே சிதறி இருந்து நாட்டின் விடுதலைக்காக ஆயிரமாயிரம் போராளிகள் உருவாவார்கள்" என்றனர். நாங்கள் இந்த பூமியை பார்த்தவாறே தூக்கில் தொங்க வேண்டும் என்றனர். தூக்கிலேற்றுபவர் சக்கரத்தை சுழற்றினான். மூவரும் கழுத்து இருக்கப்பட்டு கண் திறந்தவாறே மார்ச் 23, 1931ல் வீர மரணம் அடைந்தனர்.

# பாஜகவில் வாரிசு அரசியல்



ஜோதிராதித்ய சிந்தியா

குடும்ப அரசியல், வாரிசு அரசியலை எதிர்க்கப் போகிறாராம் மோடி.

வாருங்கள் ஒரிஸ்ஸாவிற்கு, பல்லாண்டுகளாய் முதல்வரா யிருந்த பிஜு பட்நாயக்கின் புதல்வர் இன்றைய முதல்வர் நவீன் பட்நாயக்கோடு கூட்டணி வைத்து குடும்ப அரசியலை எதிர்க்கிறாராம் மோடி.

வாருங்கள் மத்தியப் பிரதேசத்திற்கு ஒருகாலம் காங்கிரஸில் பெரும் புள்ளி, பல்லாண்டு ஒன்றிய அமைச்சர் மாதவராவ் சிந்தியா; அவர் மகன் ஜோதிராதித்ய சிந்தியா படகு தாண்டிக் குதித்து பா ஜ க வில் ஒன்றிய அமைச்சரானவர். இவர்களுடன் சேர்ந்து குடும்ப, வாரிசு அரசியலை எதிர்க்கிறாராம் மோடி.

குடும்ப அரசியலை மொத்தமாய் ஒழிக்கப் போராடும் போராளி மோடி. முன்னாள் முதல்வர் எஸ்.ஆர். பொம்மையின் செல்வன் சில மாதங்கள் முன்வரை முதல்வராயிருந்த பசவராஜ் பொம்மையுடன் சேர்ந்து களம் காண்கிறார். ஓட்டுக் கேட்க ஒன்றிணைந்து வருகிறார், மோடி.


பசவராஜ் பொம்மை

முன்னாள் பிரதமர், முன்னாள் முதல்வர் தேவ கௌடா, அவர் மூத்த மகன் முன்னாள் முதல்வர் குமாரசாமி, அவர் சகோதரர் முன்னாள் அமைச்சர் ரேவண்ணா, (பேரன்)குமாரசாமி மகன் நிகில் குமாரசமி, (மற்றொரு பேரன்) ரேவண்ணா மகன் பிரஜாவல் ரேவண்ணா. வாரிசுகள் இருவரும் எம் பி வேட்பாளர்கள் ஆகப் போகின்றனர். இவர்களோடு உடன்படிக்கை போட்டு வெட்கம், கூச்சம் இல்லாது வாரிசு அரசியலை எதிர்க்கப் போகிறாராம்!

வாய் கூசாது போகும் ஊரெல்லாம் புளுகிக் கொண்டே போகும், குடும்ப அரசியல் எனும் மோடியின் தப்பாட்டத்திற்கு இன்னும் நூறு எடுத்துக் காட்டுக்கள் கூறலாம். அதற்காக மோடி தன் அண்டப் புளுகை நிறுத்துவார் என எதிர்பார்க்க வில்லை. அவரின் பேச்சு எந்த அளவு பொய், பித்தலாட்டமானது என்பதை மற்றவர்க்கும் கூறத்தான், பகிரத்தான் இந்தப் பகிர்வு.


குமாரசாமி

மேலும் சில உதாரணங்கள்:

முன்னாள் ஹிமாச்சல் முதல்வர் பிரேம் குமார் துமாலின் மகன் இன்றைய ஒன்றிய அமைச்சர் அனுராக் தாகுர்.

ஜனசங்கம், பி.ஜே.பி. யின் பெரும் தலைவர் விஜய ராஜே சிந்தியாவின் மகள், முன்னாள் ராஜஸ்தான் பி.ஜே.பி. முதல்வர் வசுந்தராஜே சிந்தியா

பி ஜே பி யின் தேசியத் தலைவர் வேத ப்ரகாஷ் கோயலின் மகன் இன்று ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல்


மேனகா காந்தி

மோடியால் எப்போதும் கொச்சைபடுத்தப் படும் காந்தி குடும்பம் சார்ந்த மறைந்த சஞ் சய் காந்தி எம்.பி. யின் மனைவி மேனகா காந்தி, பி.ஜே.பி முன்னாள் அமைச்சர், அவர் மகன் வருண் காந்தி (ஃபிலிபித்) எம்.பி. யும் கூட.

மோடிஜி! சாமானியனின் கேள்வி: ராஜீவ் காந்தியின் மனைவி, மகனெனில் அது குடும்ப வாரிசு அரசியல், அதுவே சஞ்சய் காந்தியின் குடும்பமெனில் வேறா? அதுவே ப்ரேம் குமார் துமாலின் குடும்பமெனில் வேறா? உங்களுக்கு மட்டும் எப்படித்தான் இந்த மாதிரி தைரியமாய் மக்களிடம் போய்ப் பொய் பேச முடிகிறது? தைரியசாலி நீங்கள். ஒரு வேண்டுகோள்

மோடிஜி! குடும்ப வாரிசு அரசியல் கோயபல்ஸ் பிரச்சாரத்தைச் சற்று நிறுத்துங்கள். உங்களை மக்கள் புரிந்தாகி விட்டது.

– ஆர்.இராமானுஜன்

# தமிழை வழக்காடு மொழியாகஎ


கணபதி சுப்பிரமணியன்

**சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்காடும் மொழியாக தமிழ் மொழி ஆவதற்கு எத்தனை எத்தனை போராட்டங்கள். அதன் பிறகும் தமிழ் வழக்காடு மொழியாக முடியாமல், தமிழ் பேசும் மக்கள் தமிழில் நீதியைப் பெற முடியாமல் தடைபட்டிருக்கும் நிலையே நீடிக்கிறது.**

தமிழை சென்னை உயர்நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக, வழக்காடு மொழியாக அறிவிக்கக் கோரி, உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வளாகத்திற்குள் ஆறு வழக்கறிஞர்கள் 9.6.2010 அன்று கோரிக்கை நிறைவேறும் வரையிலான உண்ணாநிலைப் போராட்டத்தைத் தொடங்கினர். இப்போராட்டத்தை ஆதரித்து சென்னையிலும் ஏழு வழக்கறிஞர்கள் உண்ணாநிலைப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இரு இடங்களிலும் போராட்டத்தில் ஈடுபட்ட வழக்கறிஞர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். சிறையிலும் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ந்தனர்.

அப்போதைய உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி இக்பால் "21.6.2010 முதல் தமிழில் வழக்காடலாம் என வாய்மொழி வாக்குறுதி அளித்தார்.

2017 ஆம் ஆண்டிலும் இக்கோரிக்கையை வலியுறுத்தி காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை 9 பேர் மேற்கொண்டனர். இவ்வாறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும், இந்தக் கோரிக்கைக்காக உயர் நீதிமன்றத்திலும் வழக்குகள் தொடரப்பட்டன.

"சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்கும் தீர்மானத்தை உச்சநீதிமன்றத்திற்கு அனுப்பாமல், குடியரசுத்தலைவருக்கு நேரடியாக அனுப்பி ஒப்புதல் பெற்று அமல்படுத்தக்" கோரி வழக்கறிஞர் எஸ். இளங்கோ உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு தாக்கல் செய்தார்.

நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், எஸ்.ஆனந்தி அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மத்திய மாநில அரசுகள் இது குறித்து பதில் அளிக்குமாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மற்றொரு வழக்கு திருச்சி வழக்கறிஞர் முத்துகிருஷ்ணனால் தாக்கல் செய்யப்பட்டது. அதில் "சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்குவதற்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த உத்தரவிட வேண்டும்" என்று கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், "தமிழ் மற்றும் கலாச்சாரத்துறை செயலாளர், சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளர் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை ஒத்திவைத்தது.


இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 348 (2) மற்றும் 1963 ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டம் பிரிவு 7 ஆகியவற்றைப் பொருத்தமட்டில் இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களுக்கு இணையாக தமிழ்நாடு மதிக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

இந்தச் சூழலில், சென்னை உயர்நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக தமிழை அறிவிக்க கோரும் தீர்மானம் கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான அரசு தமிழ்நாடு சட்டப்பேரவையில் 6.12.2006ல் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இதனை மிகப் பெரிய வெற்றியாக ஒட்டுமொத்த தமிழகமும் பார்த்தது.

தமிழக ஆளுநரை அணுகும் முன்னர் உயர்நீதிமன்றத்திடம் தமிழ்நாடு அரசு கருத்துக் கேட்டது. அன்றைய சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஏ.பி.ஷா முன்னிலையில் கூடிய அனைத்து நீதிபதிகள் கூட்டம், தமிழக சட்டப்பேரவை தீர்மானத்தை ஒரு மனதாக ஆதரித்தது.

அரசியலமைப்புச் சட்டம் 348 (2) பிரிவின்படி தமிழக ஆளுநர் மூலம் இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவதற்காக ஒன்றிய அரசுக்கு பேரவையின் தீர்மானம் அனுப்பி வைக்கப்பட்டது.

அன்றைய இந்திய குடியரசுத்தலைவர் அப்துல்




## உயர்நீதிமன்றம் கைவிரிப்பு

சென்னை எழும்பூர் இராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகில், வழக்கறிஞர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் 24 பேர் மேற்கொண்ட உண்ணாநிலைப் போராட்டம் எட்டு நாட்கள் நடைபெற்றன. இதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு தொடங்கி வைத்தார்.

போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி சஞ் சய் கங்கபுர்வாலா மற்றும் நீதிபதி பரதசக்கரவர்த்தி ஆகியோர் அமர்வு முன், தமிழை உயர்நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக அறிவிக்க ஒன்றிய அரசுக்கு உத்தரவிட வேண்டுமென முறையீடு செய்யப்பட்டது.

அதனை விசாரித்த தலைமை நீதிபதி அமர்வு, "மனுதாரரின் கோரிக்கையை மனிதாபிமான அடிப்படையில் புரிந்து கொள்ள முடியும் என்றாலும், சட்ட ரீதியாக இப்பிரச்சனையில் நீதிமன்றம் தலையிட முடியாது" என கைவிரித்து விட்டது.





கலாமை முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி நேரில் சந்தித்து பேரவையின் தீர்மானம் நகலை வழங்கி, இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 348(2) ன் படி அதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மத்திய சட்ட அமைச்சகத்தின் ஆலோசனையை

# விடாமல் தடுக்கும் ஒன்றிய அரசு



## ஜீவா வலியுறுத்தல்

சென்னை மாகாண சட்டமன்றத்தில் "அரசாங்க மொழிக் கமிஷன்" விவாதத்தின் போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும் ஜனசக்தியின் நிறுவனருமான ப.ஜீவானந்தம் "உயர்நீதிமன்றத்திலும் தமிழ் மொழி தான் கையாளப்பட வேண்டும்" என 29.5.1955ல் வலியுறுத்திப் பேசினார்.

'நீதிமன்றத்திலும் தமிழ்' எனும் தலைப்பில் 1.9.1956 அன்று வெளியான விடுதலை நாளிதழின் தலையங்கத்தில் "இங்கு நீதிமன்றமும் கோவிலும் ஒன்றாகவே இருக்கின்றன. ஒன்றில் இங்கிலீஷ் பேசும் வக்கீல், இன்னொன்றில் சமஸ்கிருதம் பேசும் அர்ச்சக வக்கீல்" என்று சுட்டிக்காட்டியது.

உயர்நீதிமன்றத்தில் தமிழ் அலுவல் மொழி, வழக்காடு மொழியாக்கப்பட வேண்டும் என்பது தமிழ்நாட்டு மக்களின் நீண்டகாலக் கோரிக்கை. இதற்காக இந்திய வழக்கறிஞர் சங்கம் உட்பட பல்வேறு அமைப்புகள் குரல் கொடுத்து வருகின்றன.





அப்துல் கலாம் கோரினார். பேரவையின் தீர்மானம் குறித்து மத்திய சட்ட அமைச்சகம் தன்னிச்சையாக முடிவு எடுக்க முடியும். ஆனால் தேவையே இல்லாமல் ஒன்றிய சட்டத்துறை அமைச்சர் பரத்வாஜ் உச்சநீதிமன்றத்திடம் கருத்துக்கேட்டார்.

## தமிழ் கட்டாய சட்டம்

1956ல் மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. அதே ஆண்டில் தமிழ்நாடு ஆட்சி அலுவல் மொழி சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி தமிழ்நாட்டின் ஆட்சி மொழி, அலுவல் மொழியாக "தமிழ்" ஏற்கப்பட்டது. இந்தச் சட்டத்தில், 1976 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்டு, 4(ஏ) எனும் புதிய பிரிவு சேர்க்கப்பட்டது. அதன்படி, அனைத்து விசாரணை நீதிமன்றங்களிலும் தமிழ் கட்டாய அலுவல் மொழியாக்கப்பட்டது. 1976ல் மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தம் ஆறாண்டுகள் கிடப்பில் போடப்பட்டது. பின்னர், 1982ல் அச்சட்டப் பிரிவு அமலுக்கு கொண்டு வருவதாக தெரிவித்து அரசாணை வெளியிடப்பட்டது.

அந்த அரசாணைக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. இதனை விசாரித்த நீதிபதி எம்.சீனிவாசன் தலைமையிலான மூன்று நீதிபதிகள் அமர்வு, "தமிழ் ஆட்சி மொழியாக தமிழ்நாடு மாநிலத்தில் இருப்பதால், அதை நீதிமன்றங்களிலும் அமல்படுத்தும் சட்டத் திருத்தம் செல்லும்" என 21.4.1994ல் தீர்ப்பளித்தனர். சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த கர்நாடகவைச் சேர்ந்த கே.ஏ.சுவாமி 5.1.1994ல் "விசாரணை நீதிமன்றங்களிலும் நீதிபதிகள் தங்கள் விருப்பப்படி தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ தீர்ப்புகள் அளிக்கலாம்" என சுற்றறிக்கை அனுப்ப உத்தரவிட்டார். தமிழ்நாட்டின் தமிழ் ஆட்சி மொழிக் கொள்கையை இச்சுற்றறிக்கை குழிதோண்டிப் புதைத்து விட்டது.

உச்சநீதிமன்றத்தின் அன்றைய தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன், 'சென்னை உயர்நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக தமிழை அறிவிக்க முடியாது' என ஒன்றிய அரசுக்குப் பரிந்துரைத்தார்.

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியின் ஒப்புதல் கோருவதற்கான காரணம் "21.5.1965 அன்று ஒன்றிய அமைச்சரவைக் குழு, உயர்நீதிமன்றங்களில் ஆங்கிலம் தவிர்த்த பிரதேச மொழிகளை பயன்படுத்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியின் ஒப்புதல் பெற வேண்டும்' என முடிவு செய்ததே.

21.5.1965 தேதியிட்ட அமைச்சரவைக் குழு முடிவுக்குப் பிறகு இந்தி பயன்பாடு உத்தரப் பிரதேசம் (1969), மத்தியப் பிரதேசம் (1971), பீகார் (1972) ஆகிய மாநிலங்களின் உயர்நீதிமன்றங்களில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியுடன் கலந்து ஆலோசனை செய்து ஒப்புதல் வழங்கப்பட்டது.

ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு, குஜராத், சத்தீஸ்கர், மேற்கு வங்காளம், கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இருந்து அந்தந்த மாநில உயர்நீதிமன்றங்களில் அந்தந்த மாநில ஆட்சி மொழியான தமிழ், குஜராத்தி, இந்தி, வங்காளி, கன்னடம் ஆகிய மொழிகளை அனுமதிக்குமாறு மாநில அரசுகள் முன்மொழிவுகளை அனுப்பின.

இம்முன்மொழிவுகள் மீது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியிடம் கருத்துரை கோரப்பட்டது. உச்சநீதிமன்றம் இது குறித்து உரிய பரிசீலனை செய்து மாநில அரசுகளின் முன்மொழிவுகளை ஏற்பதில்லை என முடிவெடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசிடமிருந்து வந்த மற்றொரு வேண்டுகோள்படி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியின் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறும், உச்சநீதிமன்ற ஒப்புதலைத் தெரிவிக்குமாறும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை அரசு கேட்டுக்கொண்டது.

விரிவான பரிசீலனைக்குப் பின்னர் முன்மொழிவுக்கு நீதிமன்ற ஒப்புதல் தருவதில்லை என்று முடிவு எடுக்கப்பட்டதாகவும், முந்தைய முடிவையே மீண்டும் வலியுறுத்துவதாகவும் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தெரிவித்தார்.

உயர்நீதிமன்றங்களில் வழக்காடு மொழியாக இந்தி இருக்கலாம். ஆனால் பிற மாநில மொழிகள் இருக்க முடியாது என்பதுதான் ஒன்றிய அரசின் நிலைப்பாடாகும்.

இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள உயர்நீதிமன்றங்களில் அந்தந்த மாநில மொழிகள் அலுவல் மொழியாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அமலாக்காமல் ஒன்றிய அரசும் உச்சநீதிமன்றமும் அரசியலமைப்புச் சட்ட உரிமையை பாகுபாட்டுடன் செயல்படுத்துகிறது. பொது வெளியில் மேடை போட்டு பேசும் பாரத பிரதமர் உட்பட பா.ஜ.க. தலைவர்கள் தமிழின் பாசத்தை வெளிப்படுத்திப் பேசுவதும், அதற்கான கோரிக்கையை மாநில அரசுகள் முறையாகக் கொடுக்கும் போது, உச்சநீதிமன்றத்தின் பின்னால் ஒளிந்து கொண்டு ஒன்றிய அரசு நிராகரிப்பதும் தொடர்கதையாக இருந்து வருகிறது. மக்கள் போராட்டம்தான் இந்த நிலைமையில் மாற்றத்தைக் கொண்டுவரும்.

தொடர்புக்கு: 9443311023

# குடியுரிமை திருத்தச் சட்ட எதிர்ப்பு: அதிமுக நாடகம்!



இந்தியாவில் சிஏஏ எனப்படும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை அமுலுக்கு கொண்டு வருவோம் என்று 11.03.24 அன்று மத்திய பாஜக அரசு கூறி உள்ள நிலையில், இந்த சட்டம் எப்படி முதலில் நிறைவேறியது என்று பார்க்க வேண்டும். இந்த சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற அதிமுக முக்கியமான காரணம்.

ஒன்றிய பாஜக அரசு. கடந்த 2019ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இச்சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மக்களவைத் தேர்தல் நெருங்கும் வேளையில் மக்களை மதரீதியாக பிளந்து வாக்குகளைக் கவரும் நோக்கில் திடீரென இப்போது இதனை நடைமுறை படுத்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது

குடியுரிமை பெறுவதற்கு மதம் ஒரு காரணியாக முன்வைக்கப்படுவதால் இச்சட்டத்திற்கு கடும் எதிர்ப்பு உள்ளது. கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் அகதிகளாக வசித்துவரும் இலங்கைத் தமிழர்களுக்கும் குடியுரிமை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. ஆனால் அவர்கள் இந்துக்களாக இருந்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். அண்டை நாடுகளிலிருந்து வரும் இஸ்லாமியர்களும் புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். ஏன் இந்த இரட்டை நிலை?

இந்த சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற அதிமுக முக்கிய காரணம் ஆகும். மாநிலங்களவையில் இதற்கு ஆதரவாக அவர்கள் வாக்களித்தனர்:

வாக்களித்த அதிமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள்:

1. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன்
2. என்.சந்திரசேகரன்
3. ஏ.முகமது ஜான்
4. ஏ.கே.முத்துக்கருப்பன்
5. ஏ.நவநீதகிருஷ்ணன்
6. ஆர்.சசிகலா புஷ்பா
7. ஏ.கே.செல்வராஜ்
8. ஆர்.வைத்திலிங்கம்
9. ஏ.விஜயகுமார்
10. விஜிலா சத்யநாத்

பா.ம.க.வை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்

1. அன்புமணி ராமதாஸ்

இந்த 11 பெயரால்தான் மக்களை பதற வைக்கும் இச்சட்டம் இன்று நடைமுறைக்கு வந்துள்ளது. இப்போது இதற்கு எதிராக இவர்கள் பேசுவது பகல் வேடமின்றி வேறு என்ன?

## டி.கே.சிவக்குமார் மீதான பணமோசடி வழக்கை ரத்து செய்தது உச்ச நீதிமன்றம்!



கர்நாடக காங்கிரஸ் கட்சியின் துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார் மீது 2018ல் பதிவு செய்யப்பட்ட சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்கை ரத்து செய்தது உச்ச நீதிமன்றம். கூட்டுச் சதி என்ற புகாரை மட்டுமே வைத்து சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்கு தொடர முடியாது என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரான அமலாக்கத் துறையின் மறு ஆய்வு மனு நிலுவையில் உள்ளதால், அதனை மேற்கோள்காட்டி இந்த வழக்கை ரத்து செய்தது உச்ச நீதிமன்றம்.

# புதுச்சேரியில் 9 வயது சிறுமி வன்கொடுமை செய்து கொலை

## மாதர் சம்மேளனம் கடும் கண்டனம்

புதுச்சேரி முத்தியால்பேட்டை பகுதியில் மார்ச் இரண்டாம் தேதி மாலை தனது வீட்டின் அருகே விளையாட சென்ற 9 வயது சிறுமி நீண்ட நேரம் ஆகியும் வீடு திரும்பாததால், அவரது பெற்றோர், உறவினர்கள் மற்றும் சிறுமியின் தோழிகளின் வீடுகளில் தேடியுள்ளனர். சிறுமி குறித்து தகவல் கிடைக்காத நிலையில் இது குறித்த தகவல் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் முத்தியால்பேட்டை போலீசார் வழக்குப் பதிந்து மாயமான சிறுமியைத் தேடி வந்தனர்.

இதற்கிடையில் சிறுமி குறித்து தகவல் கேட்டு அப்பகுதி மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இந்நிலையில் சிறுமி வீட்டின் அருகே உ ள்ள பாதாளச் சாக்கடையில் மூட்டை ஒன்று மிதந்து கிடப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதனை சோதனை செய்தபோது, அது மாயமான சிறுமியின் உடல் என்பது தெரியவந்தது. சிறுமியின் உடல் போர்வை மற்றும் வேட்டியால் சுற்றி சாக்கடையில் வீசப்பட்டதும் தெரிய வந்துள்ளது.

புதுச்சேரியில் ஒன்பது வயது சிறுமியை கடத்தி சென்று பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்ட போது அவர் உயிரிழந்து விட்டதாகவும், பின்னர் சடலத்தை சாக்குபையில் கட்டி கால்வாயில் வீசியதாகவும் போலீசாரால் கைது செய்யப்பட்ட கருணாஸ் (19) மற்றும் விவேகானந்தன் (59) வாக்குமூலம் அளித்துள்ளனர்.

ஒன்பது வயது சிறுமிக்கு நடந்த வன்கொடுமை அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இத்தகைய சம்பவங்கள் இச்சமூகம் மிக மோசமாக சீரழிந்து வருவதையே பிரதிபலிக்கிறது. இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தமிழ்நாடு மாநில குழு வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்வதோடு, சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு மிக கடுமையான தண்டனை வழங்கக் கோருகிறது. இவ்வாறு மாநிலச் செயலாளர் மு.கண்ணகி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# அவ்வையார் விருது பெற்ற படைப்பாளர் பாமாவுக்கு இரா.முத்தரசன் வாழ்த்து



அவ்வையார் விருது பெற்ற படைப்பாளர் பாமாவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வாழ்த்து தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

சமூகசீர்திருத்தம்மற்றும் பாலின சமத்துவம் சார்ந்து செயல்பட்டு வரும் சமூக செயல்பாட்டாளார்களுக்கு தமிழ்நாடு அரசு ஆண்டு தோறும்சர்வதேசபெண்கள் தினத்தில் அவ்வையார் விருது கொடுத்து பாராட்டி, ஊக்கப்படுத்தி வருகிறது.

இந்த ஆண்டு (2024) பெண்ணிய பிரச்சினைகளை முன் வைத்தும், பாலின சமத்துவத்தை வலியுறுத்தியும் இலக்கியம் வழியாக பல படைப்புகளை வழங்கி வரும் எழுத்தாளர் பாமா என்கிற பாஸ்டினா சூசை ராஜ் அவர்கள் அவ்வையார் விருது பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

விருது பெற்ற எழுத்தாளர் பாமா அவர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு தனது அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

# அஞ்சலி: கே.கே.என்.ராஜன்



கே.கே.என்.ராஜன் அவர்கள் 'லஞ்சம் தவிர், நெஞ்சம் நிமிர், எனும் உறுதியோடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணியாற்றியவர். எந்தவிதமான அழுத்தங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் அஞ்சாமல் தனது கடமையை அப்பணியில் நிறைவேற்றியவர்.

தமிழ்நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதற்கான திட்டங்கள், அவை எவ்வாறு நிறைவேற்றப்பட வேண்டும் என்பது குறித்து விரிவாக முழுமையாக ஆய்வு செய்து அதன் அடிப்படையில் துறைக்கும், அரசுக்கும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர். அந்த துறை செயல்படுத்திய திட்டங்களிலும் ஊடுருவி தவறுகள் நடக்காமல் தடுக்கும் பணியையும் துணிச்சலோடு மேற்கொண்டார். குடிநீர், வடிகால் மேலாண்மை குறித்து பல நூல்களும் நூற்றுக்கணக்கான கட்டுரைகளும் எழுதிக் கொண்டே இருந்தார்.

அவரது ஆய்வுகளையும், முடிவுகளையும், ஆளுகிற அரசுகள் செவி சாய்த்து கேட்டு செயல்படுத்துமேயானால் தமிழ்நாட்டில் குடிநீர் தட்டுப்பாடு இல்லாத, வேளாண்மை உள்ளிட்ட அனைத்து பயன்பாட்டுக்குமான தண்ணீர் தட்டுப்பாடு இல்லாத, ஆற்று மணல் வண்டல் மண் போன்ற இயற்கை வளம் பாதுகாக்கப்பட்ட, கழிவுநீர் அகற்றுதலில் ஒரு சிறந்த கட்டமைப்பை கொண்ட உலகத்தின் முன்மாதிரியான மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க முடியும்.

ஆனால் அவர் பணியில் இருந்த காலத்தில் அவரது நேர்மைக்கும் அர்ப்பணிப்புக்கும் பரிசாக பலமுறை நெருக்கடிகளை எதிர்கொண்டது தான் கசப்பான உண்மையாகும்.

மரணத்திற்குப் பிறகு தனது உடலும் இந்த சமூகத்திற்கு பணியாற்ற வேண்டும் என்னும் நோக்கில் உடல் தானம் செய்தவர்.

ஏஐடியுசி தொழிற்சங்க தலைவராக, ஒரு கம்யூனிஸ்டாக, சிறந்த மனிதனாக வாழ்ந்து நம்மிடமிருந்து விடை பெற்றுள்ள தோழர் கே.கே.என்.ராஜன் அவர்களுக்கு செவ்வணக்கம்.

# கோவில் மனையில் குடியிருப்போர் உரிமைகளை பாதுகாக்க கோரி ஆர்ப்பாட்டம்



தமிழ்நாடு கோவில் மனையில் குடியிருப்போர் சங்கத்தின் சார்பில், கோவில் மனையில் குடியிருப்பவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் சங்கத்தின் மாநில தலைவர் வி.அ. பாலசுப்பிரமணியன், மாநில செயலாளர் வை. சிவபுண்ணியம், மாநில பொருளாளர் எஸ். ஏழுமலை ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் ஜி பழனிசாமி, மதிமுக தேர்தல் பணி குழு செயலாளர் இரா அந்திரிதஸ் ஆகியோர் பங்கேற்றனர்.

# சந்தி சிரிக்கிறது பாஜகவின் சமூக நீதி உயர்கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டு அநீதி!




ஆசிரியர் மற்றும் ஆராய்ச்சி படிப்புகள் ஐஐடிகளில் இதர பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான ஒதுக்கீட்டு இடங்கள் சட்ட விரோதமாக மறுக்கப்பட்டுள்ளது

மும்பை ஐஐடி மாணவர் குழுவான அம்பேத்கர் பெரியார் புலே ஆய்வு வட்டத்தால் (APPSC) கடந்த 6 பிப்ரவரி 2024 அன்று பெறப்பட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (RTI) அடிப்படையில் பெறப்பட்ட பதில் பின்வருமாறு: ஆர்டிஐ பதில்களின் அடிப்படையில், ஐஐடி டெல்லி மற்றும் ஐஐடி கான்பூரும் முறையே பிஎச்டி சேர்க்கை மற்றும் ஆசிரிய ஆட்சேர்ப்புகளில் இட ஒதுக்கீடு கொள்கையை மீறுவதாக அம்பேத்கர் பெரியார் குழு ஆய்வு வட்டம் கூறியது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 13,500 எஸ்சி, எஸ்டி மற்றும் ஓபிசி மாணவர்கள் மத்திய பல்கலைக்கழகங்கள், ஐஐடிகள் மற்றும் ஐஐஎம்களில் படித்துக் கொண்டிருந்த படிப்புகளில் இருந்து வெளியேறியுள்ளனர் என்று கடந்த டிசம்பர் 4, 2023 அன்று மக்களவையில் அளித்த பதில் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 2024 நிலவரப்படி, ஐஐடி காரக்பூரில் 742 ஆசிரியர்கள் உள்ளனர், அவர்களில் 683 அல்லது 92 % பேர் பொதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இதர பிற்படுத்தப்பட்டவர்களின் 40 (அல்லது 5.4%) பேரும், எஸ்சி பிரிவினருக்கு 17 (அல்லது 2.3 %) பழங்குடியினருக்கு மிகக் குறைவாக இரண்டு (அல்லது 0.27%) பேரும் இச் சமூகங்களைச் சேர்ந்தவர்களும் பணி வாய்ப்பு பெற்றுள்ளனர் என்பது அவர்கள் அளித்த பதிலின் மூலம் தெரிய வருகிறது. இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட இட ஒதுக்கீடு 27%, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 15%, பழங்குடியினருக்கு 7.5% ஆக இட ஒதுக்கீடு இப்படி சட்டபடி இருக்கும்போது, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் எவ்வளவு அநீதியாக குறைக்கப்பட்டுள்ளது இதுதான் பாஜக மாடல் சமூக நீதியா?


அரசியலமைப்பு விதிகளை காலில் போட்டு மிதித்து அப்பட்டமாக மீறுகிறது சமூக நீதி மோடியின் பாஜக ஆட்சி!

**– கார்த்திக் நவாயன்**

# தேர்தல் பத்திர விபரங்களை சமர்ப்பித்தது எஸ்பிஐ

உச்சநீதிமன்றத்தின் உத்தரவின்படி, செவ்வாயன்று மாலை இந்திய தேர்தல் ஆணையத்திடம் தேர்தல் பத்திரங்கள் குறித்த விபரங்களை பாரத ஸ்டேட்வங்கி (எஸ்பிஐ) சமர்ப்பித்திருக்கிறது. இனி எஸ்.பி.ஐ அளித்த விவரங்களை உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி தேர்தல் ஆணையம் வெளியிடுமா என்ற எதிர்பார்ப்பு அனைவரிடத்திலும் கூடியிருக்கிறது. இன்னும், சில நாட்களில் மக்களவைத் தேர்தல் அறிவிப்பு வெளியாகக்கூடும் என்பதால் தேர்தல் பத்திரங்கள் விவரங்கள்மீது கவனம் திரும்பியிருக்கிறது.

## இந்த வார கார்டூன்



# சரண்டலற்ற புதிய உலகம் படைப்போம்!

## போர்ச்சுகல்லில் நடந்த சர்வதேச தொழிற்சங்க மாநாடு அறைகூவல்!



எஸ்.காசிவிஸ்வநாதன்

**போர்ச்சுக்கல் நாட்டின் தலைநகர் லிஸ்பனில் 2024 பிப்ரவரி 22ம் நாள் சர்வதேச தொழிற்சங்கங்களின் மாநாடு நடைபெற்றது. 'உரிமை, அமைதி, ஒருமைப்பாடு தொழிலாளர்களின் ஒற்றுமை' ஆகிய முழக்கத்தை முன்வைத்து உலகத்தின் அனைத்து கண்டங்களிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து பல்வேறு தொழிற்சங்க அமைப்பின் பிரதி நிதிகள் பங்கேற்ற மாபெரும் மாநாடு.**

சர்வதேச தொழிற்சங்கங்களின் மாநாடு செக்சால் நகராட்சி மண்டபத்தில் நடைபெற்றது.

2024 பிப்ரவரி 23 ம் நாள் போர்ச்சுகல் தொழிற்சங்க கூட்டமைப்பின் (CGTP-IN) 15 வது மாநாடு லிஸ்பன் தாராடா மெரினா நகராட்சி மண்டபத்தில் தொடங்கியது.

சர்வதேச பிரதிநிதிகளுக்கு, மாநாட்டுப் பிரதிநிதிகள் பேரணியாக வந்து வணக்கம் செலுத்தினர். வாழ்த்து முழக்கங்கள் எதிரொலித்தது. கண்கொள்ளா காட்சியாக தொழிற்சங்க கொடிகளை தாங்கி வீறு நடைபோட்டு இளம் தொழிலாளர்கள் அணிவகுத்து வந்தனர். புரட்சி கீதங்கள் இசைக்கப்பட்டன. பிரதிநிதிகள் அனைவருமே கூட்டாக எழுந்து நின்று சேர்ந்திசைப் பாடல்களைப் பாடினார்கள்.

பொதுச் செயலாளர் தோழர் இஸபெல் கமாரிஹா மாநாட்டு அறிக்கைகளை சமர்ப்பித்துப் பேசினார்.

இம் மாநாட்டில் இந்தியாவிலிருந்து ஏஐடியுசி பிரதிநிதியாக மத்திய நிர்வாகக்குழு உறுப்பினர் மற்றும் தமிழ்நாடு ஏஐடியுசி தலைவர் என்ற முறையில் எஸ். காசிவிஸ்வநாதன் ஆகிய நான் பங்கேற்றேன்.

1974 ஏப்ரல் 25ம் நாள் போர்ச்சுக்கல் நாட்டில் நடைபெற்ற புரட்சியின் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களை பறைசாற்றவும், வலுவான இடதுசாரி தொழிற்சங்கமான சிநிஜிறி ன் 15வது காங்கிரஸில் பங்கேற்கவும், நேர்முக சகோதர பிரதிநிதியாகவும் அழைக்கப்பட்டிருந்தோம்.

உலகின் வலுவான புரட்சிகரமான சக்திகளில் பிரதானமான ஒன்று முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளி வர்க்கம். மேற்கு ஐரோப்பாவிலுள்ள மிக முக்கியமான நாடு போர்ச்சுக்கல்.

எத்தனையோ போராட்டங்களைக் கண்டு, வென்று இன்றும் மிக வலுவுடன் தொழிலாளர்களுக்கு பணியாற்றும் போர்ச்சுக்கல் தொழிற்சங்க கூட்டமைப்பு CGTP.

1974ல் போர்த்துக்கல்லில் புரட்சி வெடித்தது. இது கார்னேஷன் புரட்சி எனப்பட்டது. அந்நாட்டின் தொழிலாளி வர்க்கமும், ஆயுதம் தாங்கிய மக்களும், இராணுவத்தின் இடதுசாரி தலைவர்களும், வீரர்களும் ஒன்றாக அணி திரண்டனர். கம்யூனிஸ்ட் கட்சி தலைமையேற்று வழிகாட்டியது.

சர்வாதிகாரம் வீழ்த்தப்பட்டது. உறுதிமிக்க தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் மக்கள் வென்றனர். 1974 ஏப்ரல் 25ம் நாள் பாசிசம் வீழ்த்தப்பட்டது.

மக்கள் விடுதலை பெற்றனர். பாசிச அரசின் ஆதரவைப் பெற்ற ஏகபோக மேலாதிக்க பொருளாதாரக் குழுமங்களின் கோரப்பிடியிலிருந்து மக்கள் வெளிவந்தனர்.

மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசித்தனர். ஜனநாயகம் தழைத்தது. ஒரு ஜனநாயக ஆட்சி மலர்ந்தது. அரசியல், பொருளாதார, சமூக கலாச்சார வாழ்வில் புத்தொளி வீசியது. ஆழமான மாற்றங்கள் உற்பத்தி துறையில் ஏற்பட்டது. மூலாதாரமான துறைகள் மற்றும் நிறுவனங்கள் தேசவுடமையாக்கப்பட்டன. தேசத்தின் பொருளாதாரம் வளர்ந்தது. தொழிலாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. விவசாயத்துறையிலும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அடிப்படை சமூக உரிமைகள் மீட்டெடுக்கப்பட்டன. உலகலாவிய தன்மை மேலோங்கியதால் தேசிய சுகாதாரசேவை, பொதுக் கல்விக் கூடங்கள் மற்றும் பொது சமூகப் பாதுகாப்பு முதலியவை உறுதி செய்யப்பட்டன.

சிஜிடிபி யின் (General confederation of the Portugal Workers) போர்ச்சுகீசிய தொழிலாளர்களின் பொதுக் கூட்டமைப்பு ஈடு செய்ய முடியாத பங்கைக் கொண்டிருந்தது. ஜனநாயக ஆட்சி நிறுவப்பட்டது.

தொழிலாளர்களின் அடிப்படை சமூக உரிமைகள் உள்ளடக்கியதோடு நீதி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான பாதையை சுட்டிக் காட்டி முன்னேறியது. போர்ச்சுகீய மக்களின் இறையாண்மை நிலை நிறுத்தப்பட்டது. சமத்துவம், சர்வதேச மோதல்களுக்கு முடிவு கட்டுவது, உலகின் அனைத்து மக்களுடனும் அமைதியான ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு சர்வதேச உறவை உருவாக்கிக் கொள்வதன் அடிப்படையில் புதிய கொள்கை உருவாக்கப்பட்டது. ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதை லட்சியமாக ஏற்றுக் கொண்டது.






காலனி நாடுகள் மீதான யுத்தங்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டன. சமாதானமும் அமைதியும் ஏற்பட்டது. போர்ச்சுகீசிய காலனித்துவத்தால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட மக்கள் சுதந்திரம் பெற்றனர்.

இந்தக் காலகட்டம் பரவலான அணிதிரட்டல், படைப்பாற்றல் மற்றும் உழைக்கும் மக்களின் ஆக்கப் பூர்வமான பங்கேற்பின் காலமாக இருந்தது. இதில் அனைத்து வகையான ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக சுயநிர்ணய உரிமை மற்றும் போராடுவதற்கான உரிமையை அரசு அங்கீகரிக்கிறது. மனிதனை மனிதன் அடிமைப்படுத்துவதையும், காலனித்துவம், அரசியல் ராணுவ அடக்குமுறைகளையும் எதிர்த்து வீறு கொண்டு நிற்க உறுதி செய்கிறது.

ஏப்ரல் புரட்சியின் விழுமியங்களை உறுதிப்படுத்தி, அதன் பாரம்பரியத்தை நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் முன்னிறுத்தி கொண்டு செல்ல நம்பிக்கையுடன் தொழிற்சங்க கூட்டமைப்பு நடைபோடுகிறது. சிக்கலான, நிலையற்ற சர்வதேச சூழலையும், மாற்றத்திற்கான போராட்டங்களில் சிஜிடிபி தொழிலாளி வர்க்கத்திற்காகவும், அழுத்தப்பட்ட மக்களின் நலனுக்காகவும் உறுதியுடன் ஆதரவு தருகிறது. கொள்கைகள், விடாமுயற்சி, அறிவொளி, ஒற்றுமை முயற்சிகள் படைப்பாற்றல் அதன் வலிமை ஆகியவற்றைப் பாதுகாப்பதின் உறுதியை அந்நாட்டு தொழிற்சங்க கூட்டமைப்பு வெளிப்படுத்துகிறது.

சர்வதேச தொழிலாளர்களின் உரிமைக்கான போராட்டங்கள், அமைதி, ஒற்றுமை,பரந்த வெகுமக்களின் இயக்கங்கள் ஆகியவற்றிற்கு தனது ஆதரவையும், ஒருமைப்பாட்டையும் போர்ச்சுகியர்கள் தெரிவித்துக் கொள்கின்றனர். மற்ற நாட்டு தொழிற்சங்களின் போராட்டங்களையும், அனுபவங்களை பகிந்து கொள்ள போர்ச்சுகீய தொழிற்சங்க கூட்டமைப்பு சர்வதேச மாநாட்டின் மூலம் கேட்டுக் கொண்டது.

கவலையளிக்கும் சர்வதேச சூழல் மற்றும் அதனை எதிர் கொள்ளும் தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள் போராட்டங்கள் கருத்துக்கள் பற்றி பரஸ்பரம் புரிந்து கொள்ள சர்வதேச தொழிற்சங்க மாநாட்டின் நோக்கமாக எடுத்துக் கூறியது.

CGTP - IN அனுபவம் மற்றும் நிலைப்பாட்டின் அடிப்படையில் ஆவணத்தை வெளியிட்டது. தற்போதைய சர்வதேச நிலைமை தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்க இயக்கங்கள் எதிர்கொள்ளும் சவால்களை பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பாக இம்மாநாடு அமைந்தது.

உலகத் தொழிலாளர்களை ஒன்றுபடுத்தி மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, நியாயமான சமுதாயத்தை கட்டியெழுப்பவும் சர்வதேச தொழிற்சங்கங்களின் மாநாடு சபதமேற்றது.

உலக தொழிற்சங்க கூட்டமைப்பு (WFTU) தொழிற்சங்கங்களின் சர்வதேச கூட்டமைப்பு (ICFTU)சர்வதேச தொழிற்சங்க அமைப்பு (ILO) தலைவர்களும் பங்கேற்று வழிகாட்டினார்கள்.

சர்வதேச தொழிலாளர் மாநாட்டில் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் ஏஐடியுசி பிரதிநிதியாக, ஏஐடியுசி யின் போராட்ட வரலாற்றையும் இன்றைய இந்தியாவில் நடைபெற்று வரும் கார்ப்ரேட் ஆதரவு, மதவெறி கொண்ட அரசாங்கத்தின் நடைமுறை அவலங்களையும், ஏஐடியுசி முன்னெடுக்கும் அனைத்து தொழிற்சங்க, விவசாயிகள் சங்க ஒன்றுபட்ட போராட்டங்களையும் எடுத்துரைத்தோம். நீதி மற்றும் சமத்துவத்திற்காக போராடும் உழைக்கும் மக்கள் மீதான தாக்குதல்களையும் விவாதித்தோம்.

தொடர்புக்கு: 9443527486

### 2024 முதல் 2028 வரைக்குமான செயல் திட்டம்

மாநாட்டில் தீர்மானங்களை ஆட்சேபணை செய்வோர்களும் இருந்தனர். ஆதரவுக்கும் எதிர்ப்பிற்கும் அட்டைகளை உயர்த்திப் பிடித்தனர். ஜனநாயகம் செழித்து நின்றது.

மாநாட்டில் 2024 முதல் 2028 வரைக்குமான செயல் திட்டம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

சர்வதேசப் பிரதிநிதிகள் வாழ்த்துரை வழங்கினர்.

யுத்தம் வேண்டாம் எனவும் பாலஸ்தீனிய மக்களுக்கு ஆதரவாகவும் முழக்கங்கள் எங்கும் எதிரொலித்தது.

சர்வதேச பிரதிநிதிகள் முன்னிலையில் புதிய தேசியக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

புதிய பொதுச் செயலாளராக 43 வயது இளைஞர் தோழர் தியாகோ ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார். இவர் மெக்கானிக்காக பணியாற்றுபவர்.

முன்னேற்றத்தை குறிக்கோளாக கொண்ட போர்ச்சுக்கல் தொழிற்சங்க கூட்டமைப்பின் 15 வது காங்கிரஸ் வாழ்த்து முழக்கங்களுடன் நிறைபெற்றது.

'ஏப்ரல் புரட்சியின் தாக்கத்தை எதிர்காலத்திற்கு கொண்டு சென்று தொழிலாளர்களை அமைப்பாக தொடர்ந்து உறுதியுடன் ஒன்றுமைக்க, ஒற்றுமை மற்றும் போராட்டம், உத்திரவாதம், உரிமைகள், சுரண்டலை எதிர்த்து நடத்தும் போராட்டம் தொய்வில்லாமல் தொடர' சபதமேற்று சர்வதேச பாட்டாளி வர்க்கத்துடன் நடைபோடுகிறது போர்ச்சுகல் தொழிலாளி வர்க்கம்!

# பட்டாசு விபத்துக்களை தடுக்க நடவடிக்கை எடு

## ஏஐடியுசி கண்டன ஆர்ப்பாட்டம்




விருதுநகர் மாவட்டம் ஆலங்குளம் முக்குரோட்டில், விருதுநகர் மாவட்ட ஏஐடியுசி பட்டாசு தொழிலாளர் சங்கம் சார்பில் பெருந்திரள் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. சிபிஐ ஒன்றிய செயலாளர் நடராஜன் தலைமை வகித்தார். மகாலிங்கம், ஜெயபிரகாஷ், பாண்டி முன்னிலை வகித்தார்கள்.

சிபிஐ தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., வி.அழகிரிசாமி எக்ஸ்.எம்.பி., பொன்னுபாண்டியன் எக்ஸ்.எம்.எல்.ஏ., ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, சிபிஐ மா.கு. பாலமுருகன், மாவட்டத் தலைவர் சமுத்திரம் ஆகியோர் பேசினார்கள்.

சிவகாசி, வெம்பக்கோட்டை பகுதியில் 2 நாட்கள் கள ஆய்வு, பட்டாசு தொழிலாளர் கருத்து கேட்டு அதனடிப்படையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்புவது என முடிவு செய்யப்பட்டது.

பட்டாசு தொழிற்சாலையை லீசுக்கு விடுவதை தடை செய்ய வேண்டும், விதிமுறைகளை முறையாக அமுல்படுத்த அரசு அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டும், கண்காணிக்க தவறிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், விதி மீறிய பட்டாசு ஆலைகளின் உரிமங்களை ரத்து செய்ய வேண்டும், தொழிலாளர்களுக்கு முறையான பயிற்சி அளிக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் சிபிஐ மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், ஏஐடியுசி அமைப்புச் செயலாளர் வி.இரவி, இடைக்கமிட்டி செயலாளர்கள் கோவிந்தன், கணேசமூர்த்தி, இராமச்சந்திரன், பலவேசம், சுவாமிநாதன், முனியசாமி தவிதொச வரதராஜ் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

### தேர்தல் பத்திர மோசடியை மூடி மறைக்க துணை போகும்

# எஸ்.பி.ஐ. வங்கியை கண்டித்து ஆர்ப்பாட்டம்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வடசென்னை மாவட்டம் சார்பாக தேர்தல் பத்திரம் மூலம் பெரும் முதலாளிகளிடமிருந்து பாஜக பெற்ற ஆயிரக்கணக்கான கோடிகளையும் திருட்டுத்தனத்தையும் மூடி மறைக்க நினைக்கும் எஸ்.பி.ஐ. வங்கியை கண்டித்து, கண்டன ஆர்ப்பாட்டம் தண்டையார்பேட்டை எஸ்பிஐ வங்கி முன்பு மாவட்ட துணை செயலாளர் எம்.ஜெய்சங்கர் தலைமையில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் துவக்கவுரை ஆற்றினார்.

மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் த.செண்பகம், மூத்த தோழர் எம்.எஸ்.மூர்த்தி ஆகியோர் கண்டன உரை ஆற்றினர். கட்சியின் மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி நிறைவுரை ஆற்றினார். தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

## வினாடி – வினா விடைகள்

1. 1951 அக்டோபர் 25 முதல் 1952 பிப்ரவரி 21 வரை
2. 53 அரசியல் கட்சிகள்
3. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
4. சுகுமார் சென்
5. கலிலியோ
6. இரும்பு

### மீனவர்களை பாதுகாக்க தவறும்

# ஒன்றிய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

தமிழக மீனவர்களை பாதுகாக்க தவறிய ஒன்றிய அரசைக் கண்டித்து, தமிழ்நாடு ஏஐடியுசி மீனவத் தொழிலாளர் சங்கம் சார்பில், இராமேஸ்வரம் பேருந்து நிலையம் எதிரில், ஏஐடியுசி மீனவத் தொழிளார் சங்க மாநிலச் செயலாளர் சி.ஆர். செந்தில்வேல் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் பங்கேற்று கண்டன உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது.

இராமேஸ்வரம் மீனவர்களை மட்டுமல்ல, தமிழ்நாட்டு மீனவர்கள் அனைவரையும் இந்தியர்களாக ஒன்றிய அரசு பார்ப்பது கிடையாது. நம்மை விட சின்னஞ்சிறு நாடான இலங்கை அரசு கடலில் எல்லை தாண்டி வருகின்ற நம் நாட்டு மீனவர்களை துப்பாக்கியால் சுடுவது, வலைகளை அறுத்தெறிவது 40 லட்சம் ரூபாய் தொடங்கி ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள படகுகளை எல்லாம் கைப்பற்றி தேச உடமையாக்குவது போன்ற அடாவடித்தன செயல்களை தொடர்ந்து செய்து வருகிறது.



இத்தனைக்கும் இலங்கை இந்தியாவின் நட்பு நாடுகளின் பட்டியலில் வருகிறது. இலங்கை பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டபோது நம்முடைய ஒன்றியப் பிரதமர் அந்த நாட்டிற்கு உதவிகளைச் செய்தார். ஆனால் தொடர்ந்து ராமேஸ்வரம் மீனவர்களை சிறையில் அடைப்பது, படகுகளைக் கைப்பற்றுவது போன்றவைகளை தடுத்து நிறுத்த நம் பிரதமரால் இயலவில்லை.

உண்மையிலேயே இராமேஸ்வரம் மீனவர்களும் நம் நாட்டைச் சேர்ந்தவர்கள் தான் என்கின்ற உணர்வு ஒன்றியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு வந்தால் ஒரே ஒரு நிமிடத்தில் இலங்கை அரசைப் பணிய வைக்க முடியும். ராமேஸ்வரம் மீனவர்களை மட்டுமல்ல கைப்பற்றிய படகுகளைக் கூட மீட்டு வர முடியும்.

அதற்குரிய காலமும் கடந்து விட்டது. இனி கோரிக்கைகள் வைத்து எந்தப் பலனும் கிடைக்கப்போவதில்லை. வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் மோடி அரசு நம்மிடம் இருந்து விடை பெற உள்ளது. அதற்குரிய வகையில் நாம் இந்தியா கூட்டணியை ஆதரிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியுசி மாநில பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் கவுன்சில் உறுப்பினர் ஜி.ராமசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., பொன்னுபாண்டி, ஏஐடியுசி மீனவத் தொழிளார் சங்க பொதுச் செயலாளர் பி.சின்னத்தம்பி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் நீ.சு.பெருமாள் ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் என்.கே.ராஜன் உள்ளிட்டோர் உரை நிகழ்த்தினர். 300க்கும் மேற்பட்ட மீனவர் தோழர்களும் கலந்து கொண்டனர்.

நிறைவாக மீனவர் சங்க மாநிலக் குழு உறுப்பினர் எம்.அந்தோணிபீட்டர் நன்றி கூறினார்.

# கைத்தறிக்கு பட்ஜெட்டில் உரிய நிதி ஒதுக்கீடு செய்க

## கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளன மாநாடு வலியுறுத்தல்




கைத்தறியை பாதுகாக்க போதிய நிதி ஒதுக்கீடு செய்ய மறுக்கும், கைத்தறி தொழிலாளர்களுக்கு எதிரான மக்கள் விரோத, தொழிலாளர் விரோத ஒன்றிய பிஜேபி அரசை வீழ்த்த தமிழ்நாடு ஏஐடியூசி கைத்தறி நெசவு தொழிலாளர் சம்மேளன மாநில மாநாடு காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. மாநாட்டிற்கு ஜி.மணிமூர்த்தி, என்.எஸ்.பெருமாள், எல்.தங்கராஜ் ஆகியோர் தலைமைக்குழுவாக இருந்து செயல்பட்டனர். ஏஐடியூசி கொடியை வரவேற்புகுழு தலைவர் காமாட்சி பட்டு கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் பா.ஸ்டாலின் ஏற்றி வைத்தார். மாநில செயலாளர் ஏ.மூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார். நடந்த வேலைகளை மாநில பொதுச் செயலாளர் எஸ்.பி.ராதா முன் வைத்தார்.

மாநாட்டை வாழ்த்தி ஏஐடியூசி தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி. சந்திரகுமார், அமைப்பு சாரா தொழிற்சங்க மாநிலப் பொதுச் செயலாளர் ஆர். தில்லைவனம், அரசு பணியாளர் சங்கம் பி.பாலாஜி, சிபிஐ காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் பா. கார்த்தி, மாநில பொருளாளர் பீட்டர் துரைராஜ், டாஸ்மாக் தொழிற் சங்க இ.பிரகாசம் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினார். ஏஐடியூசி மாநிலப் பொதுச் செயலாளர் எம்.இராதாகிருஷ்ணன் நிறைவுரையாற்றினார்.

மாநாட்டில் புதிய நிர்வாகிகளாக மாநில கௌரவ தலைவராக எஸ்.பி ராதா, தலைவராக ஜி. மணி மூர்த்தி, பொதுச்செயலாளராக எம்.கே. ராஜன், செயலாளர்களாக என்.எஸ்.பெருமாள், ஏ.மூர்த்தி, மு. வரதராஜன், துணைத் தலைவர்களாக வா.சித்தையன், தி.சென்றாய பெருமாள், கே.கே. தாமோதரன், பொருளாளராக எம்.வேலுசாமி உள்ளிட்டோர் தேர்வுசெய்யப்பட்டனர்.

ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் பட்ஜெட்டில் உரிய நிதி ஒதுக்கீடு செய்து கைத்தறி தொழிலை பாதுகாக்க வேண்டும்.

ஜிஎஸ்டி வரி வசூலிப்பதை முழுமையாக கைவிட வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும்.

கைத்தறிக்கென்று தனித்துறை ஏற்படுத்த வேண்டும். கைத்தறிக்கு ஒதுக்கிய 11 ரகத்தை அமலாக்க முத்தரப்பு குழு அமைத்து பாதுகாக்க வேண்டும். நல வாரியத்தை முறையாக செயல்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### நூறுநாள் வேலைக்கான நிதியை குறைப்பதை கண்டித்து

# தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் பிரச்சார இயக்கம்



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்திற்கு ஆண்டுக்கு ஆண்டு நிதி ஒதுக்கீட்டை ஒன்றிய அரசு குறைத்து, இந்த சட்டத்தினை நீர்த்து போக செய்து வருகிறது.

எனவே தொழிலாளர்களின் சட்டபூர்வமான உரிமையை பாதுகாக்க, ஆண்டுக்கு 2.71லட்சம் கோடி நிதி ஒதுக்க, கடந்த மூன்று மாதங்களாக வழங்காத நிலுவைதொகையை உடனே விடுவிக்க வேண்டும், ஆண்டுக்கு 200 நாள் வேலை தின சம்பளம் ரூ700/ ஆக உயர்த்த வேண்டும போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ் மாநில விவசாய தொழிலாள சங்கம் தமிழ்நாடு முழுவதும் மாநிலம் தழுவிய விழிப்புணர்வு பரப்புரை இயக்கம் நடைபெற்று வருகிறது.

இதனையொட்டி தருமபுரி மாவட்டத்தில் நல்லம்பள்ளியில் துவங்கியது. வத்தல்மலையில் பழங்குடியின மக்களிடம் பரப்பு செய்யப்பட்டது,

நல்லம்பள்ளி வட்டாரம் ஏலகிரி ஊராட்சி பழனிகவுண்டன் கொட்டாயில் சங்க ஒன்றியச் செயலாளர் என்.முருகேசன் தலைமையில் சங்க மாநிலச் செயலாளர் ஜெ.பிரதாபன் துவக்கி வைத்தார்.

இதில் சங்க நல்லம்பள்ளி ஒன்றிய துணைத்தலைவர் ஜி.சம்பத், மாவட்டக்குழு உறுப்பினர்கள் எம்.பழனியப்பன், வி.செல்வம் மற்றும் கோவிந்தராஜி கலந்துக் கொண்டார்.

## தூய்மை பணியாளர்களுக்கு வேலைப்பளுவை திணிப்பதை கைவிட வேண்டும்

### ஏஐடியூசி ஆர்ப்பாட்டம்




தொழிலாளர்களின் கண்ணியமான வாழ்வை உறுதி செய்திட மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் பணி புரியும் தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும் என்பதை வலியுறுத்தி திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர்கள் ஏஐடியுசி சங்கம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர்கள் ஏஐடியுசி மாவட்டத் துணைச் செயலாளர் எம்.ஆர்.முருகன் தலைமை வகித்தார். அருணகிரி, குணசிங், நதியா, சாந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்

கட்சியின் புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார், திருச்சி மாவட்ட உள்ளாட்சி தொழிலாளர்கள் ஏஐடியுசி சங்க மாவட்ட தலைவர் இந்திரஜித், மாவட்ட செயலாளர் சுப்ரமணியன், துணைச் செயலாளர் ஜனசக்தி உசேன், ஏஐடியுசி மாவட்ட தலைவர் நடராஜா, பொதுச் செயலாளர் சுரேஷ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்கள்.

## நந்தா அறிவியல் கல்லூரியில் மகளிர் தின விழா




செல்வா சேரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் ஈரோடு நந்தா கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற உலக மகளிர் தின விழாவில் மக்கள் சிந்தனை பேரவையின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்வுக்கு நந்தா கல்வியின் நிறுவனத்தின் தலைவர் வி. சண்முகம் தலைமை வகித்தார். டாக்டர் எஸ்.எஸ். குமார், மகாத்மா மெமோரியல் நர்சரிப் பள்ளியின் தாளாளர் ஜெ. ஜெயகுமார் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். மனோகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக செல்வா சேரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனர் ஜெ.ஜெ. பாரதி வரவேற்புரையாற்றினார் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பி. கோமதி நன்றி கூறினார்.

## கட்டுமான தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்பும் ஒப்பந்தத்தை ரத்து செய்

### தமிழ்நாடு ஏஐடியுசி வலியுறுத்தல்

கட்டுமானத் தொழில் உள்ளிட்ட பிற தொழில்களுக்கு இந்திய இளைஞர்களை அனுப்பும் ஒப்பந்தத்தை இந்திய அரசு ரத்து செய்ய தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல் லெபனான் எல்லைக்கு அருகே கேரளாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் குறித்து நாளிதழ்கள் செய்தியை வெளியிட்டுள்ளன.

பாலஸ்தீனிய கட்டுமானத் தொழிலாளர்களுக்குப் பதிலாக, இஸ்ரேலில் வேலைக்குச் செல்ல நமது இளைஞர்களை அனுப்புவதற்கு எதிராக ஏஐடியுசி தொடர்ந்து எச்சரித்து வருகிறது. அண்டை அரபு நாடுகளுக்கு எதிராக இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் அப்பகுதி போர்க்களமாக மாறியுள்ளது.

அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சி என்று நமது இளைஞர்களை கூச்சமின்றி இஸ்ரேலுக்கு அனுப்பாமல், கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் பிற தொழிலாளர்களை “ஏற்றுமதி” செய்வதற்காக இஸ்ரேலுடன் செய்துள்ள ஒப்பந்தத்தை ரத்து செய்யுமாறு ஒன்றிய அரசுக்கு ஏஐடியுசி தனது கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துகிறது.

படுகொலைக்கு ஆளான பான் நிபின் மேக்ஸ்வெல் குடும்பத்தைச் சார்ந்துள்ளவர்களுக்கு ஒன்றிய அரசு போதுமான இழப்பீடு வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு ஏஐடியுசி கோருகிறது.

## சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு தனி நலவாரியம் ஏற்படுத்துக

### ஈரோடு வட்டார பேரவை வலியுறுத்தல்

ஈரோடு வட்டார சுமை தூக்கும் தொழிலாளர் சங்கப் பேரவை கூட்டம் ஈரோட்டில் என்.ரமணி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஏஐடியுசி சங்க தலைவர் த. ஸ்டாலின் குணசேகரன் சிறப்புரை ஆற்றினர்.

கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.டி.பிரபாகரன், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் வி.செல்வராஜன், கட்சியின் ஈரோடு வட்டார செயலாளர் ஜி. கல்யாண சுந்தரம், மாவட்ட ஏஐடியுசி துணைத் தலைவர் டி.ஏ. செல்வம் ஆகியோர் வாழ்த்துரை




வழங்கினர். சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு தனி நல வாரியம் அமைத்திட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை சாசனப் படி சுமை எடை அளவை அதிகபட்சம் 50 கிலோ என நிர்ணயம் செய்திட வேண்டும். சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு மருத்துவ திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில், ஈரோடு வட்டார சுமை தூக்கும் தொழிலாளர்கள் சங்க கௌரவ தலைவராக த. ஸ்டாலின் குணசேகரன், துணைத் தலைவராக டி.ஏ.செல்வம், ஏ.பழனியப்பன், வட்டார செயலாளராக ஜி.கல்யாணசுந்தரம், துணைச் செயலாளராக எம்.கல்யாணசுந்தரம், ப.இஸ்மாயில், பொருளாளராக எஸ்.யாசின் பாய் ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். நிறைவில், எம்.கல்யாணசுந்தரம் நன்றியுரையாற்றினார்.

### கூடுவாஞ்சேரியில் ஆர்ப்பாட்டம்

செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் ஆர். தேவராஜன் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தை மாநில பொருளாளர் எம். சங்கையா துவக்கி வைத்தார். மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் எம். ஜஹாங்கீர் சிறப்புரையாற்றினார். கட்டட சங்க மாவட்ட துணை தலைவர் ஏ. ராஜேந்திரன், கன்டோன்மென்ட் தினக் கூலி தொழிற்சங்க செயலாளர் எஸ்.கீதா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்ட செயலாளர் ஏ.வரதன் நன்றி கூறி நிறைவு செய்தார்.

### சேலம் என்.கே.கண்ணன் படத்திறப்பு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் ஒன்றிய முன்னாள் செயலாளரும், நரசோதிப்பட்டி கிளை செயலாளருமான என்.கே.கண்ணன் படத்திறப்பு நிகழ்ச்சி சூரமங்கலம் மண்டலம் நரசோதிபட்டியில் நடைபெற்றது. மண்டல பொருளாளர் பி.விஜயபாஸ்கர் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் ஏ.மோகன் படத்தை திறந்து வைத்து உரையாற்றினார். மாவட்ட துணைச்செயலாளர்கள் எம்.ராமன், ஏ.கந்தன், ஏஐஒய்எப் மாநிலச் செயலாளர் க.பாரதி, மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் டி.வி.கருணைதாஸ், ஆர்.ரமேஷ், மூத்த தோழர் பி.சிதம்பரம் ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். என்.கே.கே.ரவிசங்கர் நன்றி கூறினார்.

## “எல்லோருக்கும் சமூக நீதி” கோரி தமிழகம் முழுவதும் ஏஐடியுசி ஆர்ப்பாட்டம்




தமிழ்நாடு அரசின் கொள்கையான “சமூக நீதி, எல்லோருக்கும் எல்லாம்” என்ற கொள்கையை உள்ளாட்சி தொழிலாளர்களுக்கும் அமலாக்க வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**கோவை:** கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு, கோயமுத்தூர் லேபர் யூனியன் மாவட்ட தலைவர் வி.எஸ்.சுந்தரம், ஆர்.குணசேகரன், சி.பஞ்சலிங்கம் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் என்.செல்வராஜ், கோயமுத்தூர் லேபர் யூனியன் மாவட்ட பொதுச் செயலாளர் ஆர்.பாலகிருஷ்ணன், ஏஐடியூசி மாவட்ட கவுன்சில் பொதுச் செயலாளர் சி.தங்கவேல், கோயமுத்தூர் லேபர் யூனியன் மாவட்டத் துணைத் தலைவர் சு.பழனிசாமி, ஜி.பி.சக்திவேல், என்.சந்திரன் ஆகியோர் கண்டனவுரை ஆற்றினர்.

மாமன்ற உறுப்பினர்கள் எம்.டி.மோகன், பிரபா ரவீந்திரன், சாந்தி சந்திரன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் கே.புருஷோத்தமன், கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட பொதுச் செயலாளர் எல்.செல்வம், மாவட்ட துணைப் பொது செயலாளர் கோட்டை நாராயணன், பொருளாளர் என்.சோமசுந்தரம், யூ.கே.சுப்பிரமணியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நெல்லை:** வள்ளியூரில் நெல்லை மாவட்ட தூய்மை பணியாளர் சங்க செயலாளர் எம்.எஸ்.மணியன் தலைமை தாங்கினார். மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் ஆர். சடையப்பன், துணைத் தலைவர் ஆர்.ரங்கன், கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் கே.முத்துகிருஷ்ணன், ஊரக உள்ளாட்சி மாநில இணை செயலாளர் வி. பரமசிவன், இசை குமார் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி சிறப்புரையாற்றினார்கள்.

**குமரி:** குமரி மாவட்டத்தில் பூதப்பாண்டி பேரூராட்சி முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐடியுசி மாவட்டதலைவர் எஸ்.அனில்குமார் தலைமை தாங்கினார். ஏஐடியு சி மாவட்ட செயலாளர் ஜி.சுரேஷ் மேசியதாஸ் துவக்கி வைத்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தோவாளை தாலுகா செயலாளர் கல்யாணசுந்தரம், கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

**தர்மபுரி:** தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் என்.மனோகரன் தலைமை வகித்தார். கட்சியின் மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம், துணைச் செயலாளர் எம்.மாதேஸ்வரன், ஏஐடியூசி மாநில துணைத்தலைவர் கே.மணி, விதொச மாநில செயலாளர் ஜெ.பிரதாபன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்.

**ஈரோடு:** ஈரோட்டில் சங்கத்தின் தலைவரும், ஏஐடியுசி மாநில செயலாளருமான எஸ்.சின்னசாமி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியுசி மாவட்ட நிர்வாகிகள் பி.வி.ஸ்ரீதரன், டி.ஏ.செல்வம், இரா.ஸ்டாலின் சிவகுமார், எம்.குணசேகரன், சங்க நிர்வாகிகள் ஆர்.மணியன், பி.ரவி, ஆர்.ஞானசேகரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## இந்த வார தம்பிக்குறள்

### 155. உலகை ஒன்றாய் உணர்


**உலகையிங் கொன்றாய் உணர்ந்தால் உலகில்
பிழையிலாப் பேரறி வாம்.**

குற்றமில்லாத பேரறிவு எதுவென்றால் உலக மக்கள் அனைவரும் ஒருதாய் மக்களே (ஒரே தரத்தினரே) என்று உணர்ந்து செயல்படுவதாகும்.

**ஒன்றுமற் றொன்றாஅய் ஒடுதற்குக் காரணம்
ஒன்றினுள் உள்ளஒட்டா பண்பு**

மக்கள் ஒருமைப்பாடின்றி, ஒருவர்க் கொருவர் ஒட்டாமல் விலகி வாழ்வதால்தான், உலகில் ஒன்று பலவாகப் பிரிந்து ஒடிவிடுகிறது.

## வெள்ளித்திரை தந்த வித்தகர்



தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஐந்து முறை பதவி வகித்த முத்தமிழ் வித்தகர் கலைஞர் அவர்களைப் பற்றி, அவர் திரைத்துறைக்கு ஆற்றிய பணிகளைப் பற்றி, வெள்ளித்திரை தந்த வித்தகர் என்கிற இந்நூலை கார்த்திகேயன் அவர்கள் சுவைபட எழுதியுள்ளார்.

திரைப்படக் கலையை ஒரு சிறந்த அரசியல் பிரச்சார கருவியாக மாற்றியவர் பேரறிஞர் அண்ணா. அவரது பாதையிலே திரைப்படத்தின் மூலமாக சமூக சீர்திருத்த கருத்துக்களை மக்களிடையே விதைத்தவர் கலைஞர் அவர்கள். வரலாற்றுத் திரைப்படங்களில் வீறு கொண்ட வசனத்தின் மூலமாக தமிழகத்தின் மக்களை தட்டி எழுப்பியவர் கலைஞர். திரைப்படம் மட்டுமல்லாது இருபதிற்கும் மேற்பட்ட சமூக சீர்திருத்த நாடகங்களை எழுதி உள்ளார். தனது பதினைந்தாவது வயதில் பழனியப்பன் என்கிற நாடகத்தை எழுதி அதை திருவாரூரில் அரங்கேற்றம் செய்தார். அவரது நாடகங்கள் தமிழகத்தின் பட்டி தொட்டி எங்கும் அரங்கேற்றப்பட்டது.

மேகலா பிக்சர்ஸ் என்கிற தனி திரைப்பட நிறுவனத்தை தொடங்கி பல்வேறு திரைப்படங்களை தனது நிறுவனத்தின் சார்பாக தயாரித்துள்ளார். அதேபோன்று தனது தாயாரான அஞ்சுகம் பெயரில், அஞ்சுகம் பிக்சர்ஸ் என்கிற திரைப்பட நிறுவனத்தை தொடங்கி சில திரைப்படங்களையும் எடுத்துள்ளார். மேலும் பூம்புகார் புரொடெக்சன்ஸ் சார்பில் பல்வேறு படங்களை தயாரித்துள்ளார் கலைஞர் ஒரு கதை வசனகர்த்தா மட்டுமல்ல, ஒரு திரைப்பட தயாரிப்பாளராகவும் திரைத் துறையில் ஜொலித்துள்ளார். கலைஞர் அவர்களது திரைப்பட முயற்சிகள், அவர் பெற்ற வெற்றிகள், அவரோடு திரைப்படத் துறையில் இணைந்து பணியாற்றியவர்கள், அவர்கள் பெற்ற வெற்றிகள் என பல்வேறு சுவாரஸ்யமான விஷயங்கள் இந்நூல் முழுவதும் உள்ளது. கலைஞரின் கலைத்துறை பரிணாமங்களை அறிந்து கொள்ள இந்நூல் உதவும். இந்நூலை அனைவரும் வாங்கி படிக்கவும்.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : கார்த்திகேயன் | |
| பக்கம் | : 108 | விலை : ரூ. 150 |
| வெளியீடு | : சீதை பதிப்பகம், 6 ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 5 | |

## நூல் நயம்

### அவசரம் அவசியம்



கிராமப்புற மக்களின் சுகாதாரத்தின் அவசியம் குறித்தும், சுற்றுப்புற சூழலை எவ்வாறு மேம்படுத்தி, மக்கள் தங்கள் வாழ்நிலையை அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதின் அவசியம் குறித்தும், சுகாதாரமற்ற சூழல் என்பது தனிநபர் சார்ந்த பிரச்சனை அல்ல அது சமூகம் சார்ந்த பிரச்சினை என்கின்ற சரியான புரிதலில், அவசரம் அவசியம் என்கிற இந்த சிறுகதை நூல் திண்டுக்கல் முராநி அவர்களால் எழுதப்பட்டுள்ளது.

கழிப்பறையின் அவசியம் குறித்தும், திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படுகிற தீங்குகள் குறித்தும் இப்பொழுதுதான் அரசுகள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. நூலாசிரியர் ஒரு அரசு பணியாளராக மக்களை நேரில் சந்தித்து, அவர்களிடத்தில் கழிவறையின் அவசியம் குறித்து எடுத்துக் கூறிய, தனது களப்பணி அனுபவத்தின் வாயிலாகவே இந்நூலை படைத்துள்ளார் என்பது இந்நூலுக்கு தனி சிறப்பாகும். தூய்மையான சுற்றுச்சூழலை உருவாக்கினால் மட்டுமே, தூய்மையான இந்தியாவை உருவாக்க முடியும் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்துள்ளார். சுவிட்ச் பாரத் என்று வாயில் வடை சுடுவதால் அது உருவாகி விடாது.

கழிவறை என்பது வெறும் சுற்றுச்சூழலோடு மட்டும் சம்பந்தப்பட்டது அல்ல, மாறாக பெண்களின் சுய கௌரவம் மற்றும் பாதுகாப்பையும் உள்ளடக்கியதாகும். இதை தான்சீதா கதாபாத்திரம் நமக்கு சொல்கிறது. அவசரத்திற்கு காட்டில் ஒதுங்கும் சீதா பாம்பு கடித்து அவளும், அவள் குடும்பமும் படுகிற பாடு கொஞ்சம் நஞ்சம் அல்ல, கழிவறையின் அவசியத்தை உணர்ந்த சீதா குடும்பம் கழிவறை அமைத்து அந்த கிராமத்தில் முன்னுதாரணமாக மாறுகிறது.

இதேபோன்று தனது கிராமத்தை தூய்மையாக மாற்ற வேண்டும், தனது கிராமத்திற்கு சுத்தமான குடிநீர், தெரு விளக்கு, கழிவுநீர் கால்வாய், சுகாதார வசதிகள் போன்ற அடிப்படை தேவைகள் கிடைக்க வேண்டும் என்று அழகேசன் மட்டும் பாடுபட்டால் போதாது. இதுபோன்று ஆயிரம் ஆயிரம் அழகேசன்கள் இந்திய கிராமங்கள் முழுவதும் உருவாக வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது அவசரம் அவசியம் சிறுகதை தொகுப்பு. இந்நூலை அனைவரும் வாங்கி படிக்கவும்.

– சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : முராநி | |
| பக்கம் | : 184 | விலை: ரூ. 200 |
| வெளியீடு | : வெற்றி மொழி வெளியீட்டகம், எண். 9, இந்தியன் வங்கி கீழ்தளம், ஹோட்டல் டால்பின் அருகில், சத்திரம் தெரு, திண்டுக்கல் – 624001 | |

# பிஜேபி யின் பிரதம வேட்பாளர் பற்றிய பிம்பமும், உண்மையும்

– ஏப்ரல் 11, 2014 தி எகனாமிக் டைம்ஸ்

### திருமணம் குறித்து

சுப்ரீம் கோர்ட் உத்தரவுப்படி தேர்தல் விண்ணப்பத்தில் எந்தப் பகுதியையும் நிரப்பாமல் வெறும் கோடு போட்டால், மனு நிராகரிக்கப் படலாம்




என்று அறிவித்திருந்ததை பி ஜே பி புள்ளிகள் குறிப்பிட்டதால், தன் மனைவி பெயரைத் திரு நரேந்திர மோடி 2014 நாடாளுமன்றப் தேர்தல் (பரோடா தொகுதி) விண்ணப்பத்தில் பதிவிட்டார். அதற்கு முன் நடந்த குஜராத் சட்டசபைத் தேர்தல்களில், திருவாளர் மோடி திருமணம் குறித்த இடங்களை வெறும் கோடு போட்டிருந்தார். ஒரு முதல்வர், ஒரு பிரதமர் செய்தால் இது குற்றமில்லை; ஒரு மாணவனோ ஒரு கடன் விண்ணப்பதாரரோ இதைச் செய்தால்?

### மோடியின் படிப்பு சான்றிதழ் குறித்து

இந்தத் தரவுகள்; தி ஹிந்து, மின்ட், டைம்ஸ் ஆஃப் இந்தியா தகவல் அறியும் உரிமைச் சட்டப் படி, திரு மோடியின் கல்விச் சான்றிதழ்/ தகுதி குறித்து தருமாறு மத்திய தகவல் ஆணையத்திடம் டில்லி முதல்வர் கெஜ்ரிவால் கேட்டிருந்தார். அதன்படி,மத்தியத் தகவல் ஆணையம் பிரதமர் அலுவலகத்திடம், டில்லி பல்கலைக் கழகம் இளங்கலை (பி.ஏ.), குஜராத் பல்கலைக்கழகம் முதுகலை (எம்.ஏ.) *ENTIRE POLITICAL SCIENCE* இவற்றில் மோடி படித்த வருடம் / மாணவர் வரிசை எண் தருமாறு கேட்டிருந்தது.

இம்மாதிரி இந்தியாவில் மட்டுமல்ல உலகில் எந்தப் பட்டதாரிக்கும், இது சூட்டையோ, கொதிப்பையோ உருவாக்காது. ஆனால் நடந்த தில் நிகழ்ச்சிகளைப் படியுங்கள். படித்து நம் , மாண்புமிகு பிரதமரைப் பற்றிப் புரிந்து கொள்ளுங்கள். இவை ஒரு கேவலமான சூழலை உருவாக்கியது. அவரின் கல்வித் தகுதி/சான்றிதழ்/ பல்கலக்கழகச் சான்றிதழ் நகல்/எண் இவற்றைப் பலமுறை வேண்டியும் பிரதமர் அலுவலகமும், பலகலைக்கழகங்களும் மறுத்தே வந்துள்ளது. மூடி




மறைத்து அசிங்கப்பட்டார் நம் "மாண்பு" மிகு பிரதமர். கொடுமையை மேலும் கோரமாக்கினர் அமித் ஷா அவர்களும் அருண் ஜெட்லியும். ஒரு நாள் பத்திரிக்கை, ஊடக நிருபர்களை அழைத்து இரு சான்றிதழ்களை உயர்த்திப் பிடித்துக் காட்டினர். ஒன்று 1978 டில்லி பல்கலைக்கழகம் பி. ஏ. பட்டச் சான்றிதழ். மற்றொன்று குஜராத் பல்கலைக்கழகம் தந்த முதுகலைச் சான்றிதழ். அவை நம்ப இயலாதவை எனப் பல்வேறு தரவுகள், குற்றச் சாட்டுக்கள் வெளிவரத் துவங்கின. நம் கேள்விகள்.

◆ 1978 இல் பட்டச் சன்றிதழ் வழங்கப்பட்ட எவருக்கும் கம்ப்யூட்டர் அச்சு மூலம் தரப்படவில்லை. கையெழுத்திலேயே நிரப்பப்பட்டது. திரு மோடிக்கு மட்டும் எங்கிருந்து, அதுவும் திடீரென்று?

◆ அதிலுள்ள கணிப்பொறி எழுத்து உரு (ஃபாண்ட்) 1978 இல் நடைமுறைக்கு வரவே இல்லை. 1992 / 94 இல்தான் வந்தது. பின் எப்படி?

◆ *"ENTIRE POLITICAL SCIENCE"* என்ற பாடப் படிப்பு, இந்திய, உலகளாவிய அளவில் யாருக்கு நடத்தப் பெற்றதாக இன்று வரை தகவலே இல்லையே! இது ஒரு ரகசியப் பட்டப்படிப்போ?

### "மன் கீபாத்" பேசுமா மோடிஜீ?

மோடி அருமையான ஹிந்திப் பேச்சாளர். ஒருவழிப் பேச்சாளர். பதில் பேசும் வாய்ப்பில்லாதிருப்பின், அந்த எதிர்த் தரப்பை நையப் புடைக்க நையாண்டி செய்வதில் வல்லவர்.

8.2.2017 பாராளுமன்றத்தில்: பலரின் வாழ்வைப் பாழாக்கி, உயிரையும் குடித்த, மொத்தத்தில் பலனில்லாத "நவம்பர் 2016 பண மதிப்பிழப்பு நடவடிக்கை" பற்றி மன்மோகன் சிங் இப்படிக் குறிப்பிட்டார்: இது ( பணமதிப்பிழப்பு ) ஒரு திட்டமிட்ட கொள்ளை என்றார். இதைக் கேட்ட உடன், கோபம் கொப்பளித்து, 56 அங்குல மார்பகத்து மோடி மிக நாகரீகமாக(!) இப்படிக் கூறினார்:

"தன்னைச் சுற்றி பல தவறுகள் நடந்த போதிலும், அதைக் கண்டு கொள்ளாமலிருந்தவர் மன்மோகன்சிங். அவரை எதுவுமே பாதிக்கவில்லை. அவர் போல மழைக் கோட் போட்டுக் கொண்டு நனையாமல் குளித்தவர் யாருமில்லை" என்றார்.

கேள்விக்கான பதில் கூறாது, கேள்வி கேட்பவர் மீது தனி நபரைத் தாக்கும் விதமாகக் கேவலமாய்ப் பேசுபவர் இவர்.

* இவரிடத்தில் நாமும் இப்படிக் கேட்கலாமல்லவா? மோடி அவர்களே! உங்கள் உறுப்பினர் பிரிஜ் பூஷண் பாலியல் குற்றச் சாட்டுக்களுக்கு ஆளாகிப் போராட்டங்கள் நடக்க, உங்களைச் சுற்றி எதுவும் நடக்காதது போல வாய்மூடி அமர்ந்திருந்தீரே ?

* மணிப்பூரில் குகி இனத்துப் பெண்கள் இருவரை




நிர்வாணப் படுத்தித் தெருக்களில் இழுத்து வந்து கொலை செய்யப்பட்டதை ஊரே, உலகமே கண்டித்து வசை பாடிய போதும் உதடுகள் உங்களுக்கு ஒட்டிப் போய் இருந்ததா? இது பற்றி பாராளுமன்றத்தில் உங்கள் கவன ஈர்ப்பு எந்த அளவில் இருந்தது ? மௌனம், ஆழ்ந்த மௌனம்!

மத்தியத் தணிக்கைக் குழு உங்கள் ஆட்சியின் அவலட்சணத்தை, நிகழ்ந்த ஊழல் பரிவர்த்தனைகளைப் புள்ளி விபரங்களோடு பத்தி பத்தியாய் வெளியிட்டு நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வைத்த பின்னும் "இடிச்ச புளி" யாக இருந்த மௌன குரு தானே நீங்கள் !

"மன் கீபாத்" பேசுமா மோடிஜீ?

### குஜராத் படுகொலை நாய்களோடு ஒப்பீடு

இந்தியாவில் சாலைகள் இருப்பதும், கார்கள் ஓடுவதும், பள்ளிகளில் பாடம் நடப்பதுமே 2014 லிருந்து மோடி வந்ததின் பின்னர்தான். மக்கள் மீது அவர் பாசம் , நேசம் கொண்டவர். இவ்வாறு அவருடைய பிரச்சார ஊது குழல்கள் பிளிறுகின்றனவே, இதையும் பாருங்கள்:

ஜுலை 2013 அவர் அளித்த பேட்டியில், 2002 குஜராத் படுகொலைகளில் ஆயிரக்கணக்கானோர் அப்பாவிகள் மாண்டது பற்றி மோடி கூறுகிறார்: நாம் காரில் அமர்ந்து பயணிக்கும் போது சக்கரத்தின் அடியில் ஒரு நாய்க்குட்டி சிக்கி இறந்தல் வருத்தம் வருமல்லவா, அந்த வருத்தம்தான் எனக்கும் என்றார். உயிர் பிரிந்த அப்பாவி இந்தியர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை "நாய்க்குட்டி மரணத்தோடு" ஒப்பிட்ட மாமனிதரே இவர்.

மற்றொரு சம்பவம்: 2002 ஏப்ரல் மாதம் வன்முறைகளில் வீடிழந்த (99% இஸ்லாமியரே) பலர் நிவாரண முகாம்கள், தற்காலிக மருத்துவ முகாம்களில் தங்க வைக்கப் பட்டிருந்தனர். பார்வையிட வந்த அன்றைய குஜராத் முதலமைச்சர் மோடி அவர்கள், ஈவிரக்கமின்றிக் கொச்சையாய் ஒன்றைப் பதிவிட்டார்: "இவை குழந்தைகள் உற்பத்தி செய்யும் ஆலைகள்".

# குணா பாடலுக்கு புதிதாய் ஒரு அவதாரம்



எம்.ஆர். ஆதவன்




## மஞ்சுமல் பாய்ஸ்

## திரைப்பட விமர்சனம்

இரண்டு வாரத்தில் மூன்று மலையாள திரைப்படங்கள் வெளிவந்தன. அதில் மஞ்சுமல் பாய்ஸ் ஒரு அரைத் தமிழ் படம். அரைத்த மாவையே அரைக்கும் பெரும்பான்மைத் தமிழ் படங்களை விட்டு தள்ளி அகன்று நிற்கும் படம். மிக ட்ரெண்டிங்காக, அனைவரையும் கவர்ந்து இழுத்து வருகிறது.

மலையாளப்படங்களுக்கு என்று ஒரு தனி இடத்தை தமிழர்கள் வைத்திருக்கிறார்கள். அதில் கொலோச்சிக் கொண்டிருக்கும் படங்களில் இந்த மஞ்சுமல் பாய்ஸ் நிச்சயமாய் சேர்ந்துவிடும்.

படத்தைப் பார்த்தால் நிச்சயமாக நீங்கள் ரசித்து கொண்டாடுவீர்கள்.

பதினோரு பேர் கொண்ட இளைஞர் பட்டாளம், கொச்சி பக்கம் உள்ள மஞ்சுமல் என்ற இடத்திலிருந்து கொடைக்கானலுக்கு சுற்றுலா வருகிறார்கள். நாம் நன்கறிந்த ‘குணா குகை’யில் ஒருவர் விழுந்து விடுகிறார். நண்பர்கள் எப்பாடுபட்டு அவரைக் காப்பாற்றுகிறார்கள் என்று சொல்லும் போது நம்மை இருக்கையின் நுனிக்கு இழுத்து வந்து விடுகிறார்கள். வேறு எதுவும் நடந்து விடக்கூடாது என நம் நெஞ்சைப் பதற வைக்கிறார்கள்.

இயக்குநர் சிதம்பரத்திற்கு இது இரண்டாவது படம். அப்படி தோன்றாத வண்ணம் தேர்ச்சியோடு வழிநடத்துகிறார். பெரிய பிரசித்தி பெற்ற கலைஞர்கள், நட்சத்திர நடிகர்கள் இல்லை. கதாநாயகி கூட இல்லை. இரண்டே பாடல்கள். அதிலும் ஒன்று நமக்குப் பிடித்த “கண்மணி அன்போடு காதலன்” எழுதிய கடிதம்.

**படத்தின் கதைதான், கதாநாயகன். அம்பிளி, சூடானி, ரோமான்சம் ஆகிய திரைப்படங்களில் தனது நடிப்பால் ஈர்த்த நடிகர் சௌபின் இப்படத்தில் நடித்ததோடு, தயாரிப்பாளராகவும் புதிய பரிமாணம்.**

**படம் ஆரம்பித்து 15 நிமிடத்திற்குள் அந்த 11 கதாபாத்திரங்களோடு நமக்கு நெருக்கம் ஏற்பட்டு விடுகிறது. மிஞ்சி இருக்கும் ரெண்டேகால் மணி நேரமும் ஒரே குகையை சுற்றியே கதை ஓடுகிறது. நம்மையும் இழுத்துக் கொண்டு ஓடுவது தான் இப்படத்தின் வெற்றி.**

**குணா குகையில் உள்ள பள்ளத்தை விவரிக்கும் காட்சி மிகவும் நேர்த்தியாக படமாக்கப்பட்டுள்ளது விழும் நபர் (சுபாஷ்) எவ்வாறு கீழே விழுகிறார் என்று விவரித்த காட்சி கம்ப்யூட்டர் கிராபிக்ஸ்தான் என்றாலும், நமக்கு சிலிர்த்துப் போகிறது.**

உள்ளூர்வாசிகளின் விவரிப்பின் வழியே அந்த குகையின் குரூரம் முன்வைக்கப்படுகிறது. அந்தப் பள்ளத்துக்கு இன்னொரு பெயர் டெவில் கிச்சன், சாத்தானின் சமையலறை!

படத்தின் மிகப்பெரிய பிளஸ், திரைப்படம் எடுக்கப்பட்ட விதம்தான். குகையைச் சுற்றி மட்டுமே கதை நகர்ந்தாலும், கொஞ்சம் கூட சலிப்பு தட்டவில்லை. நாமும் குகைக்குள் மாட்டிக்கொள்கிறோம். மூச்சு விடுவதே சிரமமாகி விடுகிறது போங்கள்! அவ்வளவு அழகாக காட்சிப்படுத்தி உள்ளார் ஒளிப்பதிவாளர் சைஜு காலித்.

ஒரு குகைக்குள் எவ்வாறு இப்படி ஒரு காட்சியமைக்க முடியும் என்று ஒவ்வொரு நொடியும் யோசிக்க வைக்கிறார்கள். படம் முடிந்த பின்னரே அது குணா குகையைப் போலவே அமைத்த செட் என்று தெரிய வந்தது. எது குகை, எது செட், எது கொடைக்கானல் என்று தெரியாமல் கலக்கி இருக்கிறார், புரொடக்ஷன் டிசைனர் அஜயன்.

வெறும் பேக்ரவுண்ட் ஸ்கோர் மட்டுமல்லாமல், அப்படி ஒரு சவுண்ட் எபெக்ட். சில இடங்களில் எந்தவித சத்தமும் இல்லாமல், நிசப்தத்தையே மிகவும் சத்தமாய் நமக்குத் தோன்ற வைத்த இசையமைப்பாளர் சுசின் ஷியாம் பாராட்டுக்குரியவர்.

இதை இப்படியே வைத்துவிட்டு, படத்தை பார்த்து விட்டு வந்து படித்தீர்கள் என்றால் நல்ல லிங்க் கிடைக்கும். ஓடிடியில் அல்ல; திரையிலேயே பார்த்தாக வேண்டிய படம் இது.

குணா திரைப்படத்திற்கு இப்படம் ஒரு பெரிய சமர்ப்பணம் செய்துள்ளது. அதில் வரும் பாடலான கண்மணி அன்போடு காதலன் படத்தில் கிளைமாக்ஸில் வைக்கப்பட்ட விதம் மிகவும் அற்புதம். ராஜாவின் கை வண்ணத்தில் வந்த பாடல், காதலுக்கு மட்டுமல்ல நட்புக்கும் அவ்வளவு அழகாகப் பொருந்துகிறது.

இவ்வளவு பெரிய குகையில் இருந்து விழுந்தவனை எப்படியடா காப்பாற்ற முடியும்? சும்மா கதையெல்லாம் விடாதீங்க என்று நினைக்கத் தோன்றும். ஆனால் 2006 ஆம் ஆண்டில் உண்மையிலேயே இவ்வாறு நடந்தது என்று படத்தில் முடிவில் காட்டுகிறார்கள். நமக்கு இன்னும் ஆச்சரியம். படம் முடிந்த பின்னும் கூட, அதைப் பற்றியே பேச வைப்பதால், நெஞ்சுக்குள் இன்னும் ஓடி முடியவில்லை என்று புரிகிறது.

அனைவரும் இப்படத்தை திரையரங்குகளில் குடும்பத்தோடு போய் பார்க்க தகுதியான திரைப்படம் ஆகும் இந்த மஞ்சுமல் பாய்ஸ்.

**தொடர்புக்கு: 9840244625**

# எனக்கு பிடித்த தோழர் ஜென்னியின் வரிகள்



மார்க்ஸின் மனைவி ஜென்னிவான் வெஸ்டபாலன் என்பவர் ஓர் குடும்பத் தலைவியின் அன்றாட கடமையை மிக உருக்கமாக தனது ஒரு நாள் குடும்ப வாழ்க்கை என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதைப் படித்து நெஞ்சையே உலுக்கும் அவரது வாழ்க்கை வரலாற்றை நாம் முதலில் கற்றுக்கொள்ள வேண்டும். ஜென்னியின், “இல்வாழ்க்கையின் ஒரு நாளை இருந்ததும் இருந்தபடி சித்தரித்துக் காட்டுகிறேன். இதை பார்த்தால் இத்தகைய இன்னல்களை நாடு கடத்தப்பட்ட மிகச் சிலரே அனுபவித்திருப்பர் என்பதைக் காணலாம்“.

“செவிலித்தாய் அமர்த்துவது என்றால் மிகவும் செலவாகும். ஆதலால் எனது மாா்பிலும், முதுகிலும் தொடர்ந்து பயங்கரமான வேதனை இருந்தபோதிலும் குழந்தைக்கு பாலுட்டினேன். இந்தப் பூஞ்சைக் குழந்தை பாலுடன் சேர்ந்து அளவற்ற கவலையினை அடக்கி மூடப்பட்ட வருத்தங்களையும் சேர்த்துப் பருகியதால் இரவும் பகலும் பரிதாபகரமாக கஷ்டப்பட்டபடி இருந்தது.

இந்த உலகிற்கு வந்த நாள் முதல் அவன் ஒரு இரவிலாவது இரண்டு, மூன்று மணி நேரத்திற்கு மேல் நிம்மதியாக உறங்கியதில்லை. அண்மையில் அவனுக்கு கடுமையான வலிப்புகள் வரத்தொடங்கின. வாழ்விற்கும் சாவிற்கும் இடையே அவன் எப்பொழுதும் போராடிக் கொண்டே இருந்தான். அவனுக்கிருந்த வேதனையில் அவன் பலமாக உறிஞ்சியதன் விளைவாக எனது மார்பில் தோல் வெடித்து நடுங்கும். அவனது சிறிய வாய்க்குள் இரத்தம் கொட்டியது”. என்று தனது மனவேதனையை கூறும்போது நெஞ்சினை பிளக்கச் செய்தது.

அப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் வாசகங்களை படிக்க, மனம் உருகுவதும் மிகுந்த வேதனையாகவும் இருந்தது “எங்களுக்கு 4 குழந்தைகள் என்று சொன்னதால் யாருமே எங்களை வாடகை வீட்டில் குடி வைத்துக் கொள்ளவில்லை. எங்கள் உடமைகள் பறிமுதலாகிறது என்ற புரளிகேட்டு, மருந்துகடை, ரொட்டிக் கடை, கசாப்புக் கடைக்காரர்கள், பால்காரன் எல்லோரும் நெருக்கியதால் உடனே படுக்கைகளையெல்லாம் விற்று இவர்களின் கணக்கை தீர்த்தேன்.

குறிப்பாக என்னைப் பொருத்தவரை, நான் மகிழ்ச்சியுள்ள சலுகைகள் பெற்ற அதிஷ்டக்காரி, என்றே என்னை கருதுகிறேன். காரணம் எனது வாழ்க்கையின் ஆதரவான என் அருமை கணவர் இன்றும் என் அருகில் இருக்கிறார். என்கிற வாக்கியங்களில் மார்க்ஸின் மேல் ஜென்னிக்கு இருக்கும் பற்றும், பிடிப்பும், காதலும் நம்மை வியப்படையச் செய்கிறது.


ஏனெனில் ஏழு குழந்தைகளில் நான்கு குழந்தைகள் இறந்த பின்னும் தனது காதல் கணவனான மார்க்ஸின் சிந்தனைகளுக்கு ஊக்கமளிப்பதை எவராலும் இயலாத மிகுந்த போற்றுதலுக்குரிய மனைவியின் கடமையாக கூறியுள்ளார். மேலும் அக்கடிதத்தின் இறுதியில் அன்புள்ள நண்பரே, விடைபெறுகிறேன்

உங்கள் மனைவிக்கு எனது பாசமிக்க வாழ்த்துக்களைச் சொல்லுங்கள்.தனது செல்வத்துக்காகக் கண்ணீர் வடித்துள்ள ஓர் அன்னையின் சார்பில் தங்கள் சின்னஞ்சிறு தேவதைக்கு முத்தங்கள், எங்கள் மூத்த குழந்தைகள் மூவரும் அற்புதமாகவே உள்ளனர். பெண்கள் அழகாகவும், ஆரோக்கியமாகவும் மகிழ்வுடனும் நன்றாகவும் உள்ளனர்.

ஜென்னிவான் வெஸ்டபாலனிற்கு நமது முதல் கடமை குடும்ப உறவுமுறைகளை பலப்படுத்துவது, நமது குழந்தைகளுக்கு ஆற்றும் கடமைகளையும் எடுத்துரைக்கும் கருத்துகளாக எடுத்துக்கொண்டு நாம் நமது குடும்பத்திற்கு, கட்சி குடும்பத்திற்கும், மற்ற வெகுஜன அரங்கிற்கும் நாம் இணைந்து ஒன்றாகப் புரட்சி செய்வோமென உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**-கோ.செங்கொடி**, வழக்கறிஞர்


## இந்த வார கார்டூன்



Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57
JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday

# விவசாயிகளின் பெருந்திரள் எழுச்சி





## அச்சத்தில் ஐரோப்பிய நாடுகளின் அரசுகள்

**இந்தியாவில் மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளிலும் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். விவசாயிகளின் இந்த எழுச்சியால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அரசுகள் கதிகலங்கிப் போயின.**

இன்றைக்கு வெள்ளம், வறட்சி போன்ற தீவிர வானிலை நிகழ்வுகள் விவசாயிகளுக்குப் பெரும் சுமையாக மாறியுள்ளன. இந்நிலையில் காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம்கொண்டுவந்துள்ளசுற்றுச்சூழல் விதிமுறைகளும் விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இவற்றுக்கு எதிராகவும் மேலும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் விவசாயிகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

போலந்து நாட்டின் தலைநகர் வார்சாவில், லட்சக்கணக்கான விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். டிராக்டர்களுடன் நெடுஞ்சாலைகளை முற்றுகையிட்டனர். அவர்கள் மீது கண்ணீர் புகைக் குண்டுகள் மற்றும் ரப்பர் குண்டுகளால் சுட்டுக் கலைக்க அந்நாட்டு காவல்துறையினர் முயன்றனர்.

லிதுவேனியா மற்றும் உக்ரைன் செல்லும் நெடுஞ்சாலைகளையும் டிராக்டர்களுடன் போலந்து விவசாயிகள் முற்றுகையிட்டனர். வெளிநாடுகளில் இருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

கனடா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, ஸ்பெயின், கிரீஸ், மால்டா, பிராக் உள்ளிட்ட நாடுகளில் டிராக்டர்களுடன் விவசாயிகள் பெருந்திரளாகப் பங்கேற்ற முற்றுகைப் போராட்டங்கள் நடைபெற்றன. அந்த நாடுகளின் நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து முடங்கின.

பிரான்ஸ் நாட்டில் மாட்டுச் சாணம் மற்றும் வேளாண் கழிவுகளை சாலைகளிலும் அரசு அலுவலங்கள் முன்பும் கொட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். விவசாயிகளுடன் உரையாடவோ, அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலிக்கக் கூட எந்த நாட்டும் அரசும் தயாராக இல்லை. உழவர்கள் இல்லாவிட்டால் உணவு இல்லை. உயிருடன் மனித குலம் இருக்கமுடியுமா? என்று ஆவேசத்துடன் கேள்வி எழுப்பும் விவசாயிகள், தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

- வ.மணிமாறன்











Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.